வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 29.07.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 234 | பக்கங்கள் : 16




# இலங்கைப் படைகளுக்கு எதிராக ஜெனிவாவில் இலங்கையர் போராட்டம்

## ஜனாதிபதியை பதவி விலகவும் வலியுறுத்து

ஜெனிவா, ஜூலை 29

காலிமுகத்திடலில் கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் மீது படையினர் நடத்திய தாக்குதலை கண்டித்து ஜெனிவாவில் போராட்டம் இடம்பெற்றது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவை முன்பாக சுவிற்சர்லாந்தில் வாழும் இலங்கை மக்கள் - சிங்கள மக்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினர். (ஐ)



# போராட்ட களத்துக்குள் பயங்கரவாதிகள் நுழைவு

## நீதி அமைச்சர் விஜயதாஸ சாடல்

- பிரபாகரனைவிட அழித்தது தெற்கு பயங்கரவாதமே!
- பெரும் குற்றச்செயல் செய்தோரே கைதாகின்றனர்
- கைது நடவடிக்கையை எவருமே எதிர்க்கவில்லை

கொழும்பு, ஜூலை 29

போராட்ட களத்துக்குள் பயங்கரவாதிகள் நுழைந்திருக்கின்றனர். மக்கள் ஆணை மூலம் அதிகாரத்துக்கு வரமுடியாத மறைமுக அரசியல் சக்திகள் போராட்டத்துக்குள் மறைந்திருக்கின்றன. இது பயங்கரமான நிலைமையாகும் - என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார். 15

# இந்திய நலனை பாதுகாக்கும் நடவடிக்கையை எடுப்போம்!

## சீன கப்பல் குறித்து இந்தியா எச்சரிக்கை

புதுடில்லி, ஜூலை 29

"இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களை பாதிக்கும் எந்தவொரு முன்னேற்றத்தையும் அரசாங்கம் கவனமாகக் கண்காணித்து அவற்றைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளையும் எடுக்கிறது" என்று இந்திய வெளியுறவு அமைச்சின் செய்தி தொடர்பாளர் அரிந்தம் பாக்ஸி தெரிவித்துள்ளார்.

சீனாவின் விண்வெளி கண்காணிப்பு கப்பல் இலங்கையின் அம்பாந்தோட்டைக்கு வருவது தொடர்பிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார். இந்தக் கப்பல் எதிர்வரும் ஓகஸ்ட் 11ஆம் திகதி சீனாவுக்கு வழங்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடையும்.

இது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்று அந்த நாட்டு ஊடகங் 15

# பாராளுமன்றம் ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூலை 29

பாராளுமன்ற கூட்டத்தொடர் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஒத்திவைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நேற்றிரவு வெளியான வர்த்தமானி 15



தந்தையை நினைவுகூர்ந்து அவருக்கு பிதிர்க் கடன் செலுத்தும் நாளான ஆடி அமாவாசை தினமான நேற்று கீரிமலை கடற்கரையில்தமது கடமைகளை ஆற்றும் இந்துமதத்தினர்...!

# இலங்கை அரசியல் ஆபத்தான நிலையில்!

## பிட்ச் தரப்படுத்தல் அமைப்பு

நியூயோர்க், ஜூலை 28

புதிய அரசாங்கத்துக்கு ராஜபக்ஷ குடும்பத்துடன் உள்ள தொடர்புகள் காரணமாக இலங்கை அரசியல் ஆபத்தை எதிர்கொள்கின்றது என்று 'பிட்ச்' தரப்படுத்தல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை நாணய நெருக்கடி மற்றும் வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வது தொடர்பில் அரசியல் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது என தெரிவித்துள்ள பிட்ச் தரப் 15

# காலிமுகத்திடலுக்கான போராட்ட பங்களிப்பை நிறைவு செய்கிறோம்!

## கறுப்பு தொப்பி இயக்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக மக்கள் போராட்டத்தை ஆரம்பித்த கறுப்புத் தொப்பி இயக்கம், காலிமுகத்திடலுக்கான தனது பங்களிப்பை நேற்று முதல் உத்தியோகபூர்வமாக நிறைவு செய்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவின் ராஜினாமாவைத் தொடர்ந்து, காலிமுகத்திடல் போராட்ட தளத்தை ஆக்கிரமிப்பு செய்வதில் எந்தக் காரணமும் இல்லை என அந்த இயக்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

'காலி முகத்தி 15

# கோட்டாபய நியமித்திருந்த கல்வி ஆணைக்குழு கலைப்பு

கொழும்பு, ஜூலை 29

கல்வி மேம்பாடு, விரிவாக்கம் மற்றும் நவீன மயப்படுத்தலுக்கான பரிந்துரைகளுக்கு என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைத்த கல்விக்கான ஜனாதிபதி ஆணைக்குழு உடன் நடைமுறைக்கு வரும்வகையில் கலைக்கப்பட்டுள்ளது.

கல்விக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் 15

# அரசாங்கம் ஒதுக்கிய இடத்தில் போராட நாங்கள் தயாரில்லை!

## அனைத்து பல்கலை மாணவர்கள் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

அரசாங்கம் ஒதுக்கியிருக்கும் விகாரமாதேவி பூங்காவில் போராட்டம் நடத்துவதற்கு நாங்கள் தயாரில்லை. எங்களுக்கு தேவையான இடத்தில் நாங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்படுவோம். யார் என்ன சொன்னாலும் நாட்டு மக்களுக்காக மேற்கொள்ளப்படும் போராட்டத்தை தொடர்ந்து காலி முகத்திடலில் நடத்திச் செல் 15

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை காலி பண்ணுவதென்று சிலர் முடிவெடுத்து விட்டனரென்றே தெரிகின்றது.

அண்மையில், அதன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரான செல்வம் அடைக்கலநாதன், “கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், தனது பதவியிலிருந்து விலகவேண்டும்”, என்று உள்ளூர் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளிக்கப் போய், அந்த விடயம் இப்போது கட்சிக்குள் பூதாகாரமாக வெடித்திருக்கின்றது.

இப்படியொரு நிலை வரும் என்று தெரியாமல் செல்வம் இவ்வாறு தெரிவித்திருக்க முடியாது. சிலவேளை அவரே இப்படியொரு நிலை வரவேண்டும் என்பதற்காகவே செய்தாரோ தெரியவில்லை. எழுந்து நடமாட முடியாதிருக்கின்ற சம்பந்தன், கட்சித் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகவேண்டும் என்றும் ஆகக் குறைந்தது பாராளுமன்றக் குழுத்தலைவர் பதவியிலிருந்தாவது விலகவேண்டும் என்றும் “ஈழநாடு”வும் அண்மையில் தலையங்கம் தீட்டியிருந்தது.

பாராளுமன்றத்திற்கே செல்லமுடியாத அளவுக்கு இருக்கின்ற ஒருவர் தொடர்ந்து பாராளுமன்றக் குழுத் தலைவராக தொடர்வது எந்த வகையிலும் பொருத்தமாக இருக்காது என்று இப்போது பலரும் பேசத் தொடங்கியிருக்கின்ற நிலையிலேயே செல்வமும் அதனை தெரிவித்திருக்கிறார்.

ஆனால், அதனால் ஆத்திரமடைந்துள்ள தலைவர் சம்பந்தன், அதற்குப் பழிதீர்க்கும் வகையில் சில நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கிறாரென, கூட்டமைப்பு உள்வீட்டு தகவல்களை விலாவாரியாக தருகின்ற ஓர் ஊடகர் வெளியிட்டிருக்கிறார்.

பாராளுமன்றில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது, கூட்டமைப்பு டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்க முடிவெடுத்ததும், இதனையடுத்து கூட்டமைப்பின் சில தலைவர்கள் ரணிலை சந்தித்தனரெனவும் சமூகவலைத் தளங்களில் உலாவிய அநாமதேய “குசும்பு”களைப் பற்றிய தகவல்களையே சம்பந்தன் தரப்பு சேகரித்து வருவதாகவே அந்த ஊடகர் தெரிவித்திருக்கிறார்.

இதுபோன்ற குசும்பு செய்திகளை உண்மை என்று நம்பகின்ற அளவுக்கு சம்பந்தன் விபரம் அறியாத ஆள் அல்ல.

இந்தக் குசும்பு செய்திகளை ஒரு குறிப்பிட்ட சமூக வலைக்குழுவே திட்டமிட்டு பகிர்ந்து வருவதும் அந்த குழு ஏற்கனவே சில எம். பிக்களை பிரதமர் “றேஞ்சு“க்கு உயர்த்தி பரபரப்பை ஏற்படுத்தியதும் இரகசியமானதல்ல.

இப்போது, செல்வமும் வேறு சிலரும் ரணிலிடம் பணம் பெற்றார்கள் என்றும் அதுபற்றிய தகவல்களையே - அதாவது அந்த குசும்பு செய்திகளையே இப்போது சம்பந்தன் தரப்பு செல்வத்துக்கு எதிராக திரட்டி வருவதாகவும், சம்பந்தனுக்கு இந்த விடயத்தில் வேறு சில தரப்புக்களும் உதவி வருவதாகவுமே அந்த ஊடகர் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

இப்போது, சம்பந்தன் எப்படி செல்வத்திற்கு எதிரான தகவல்களை திரட்டுகின்றாரோ அதேபோல மற்றுமொரு தரப்பும், கூட்டமைப்பின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் சீன தூதரகத்துக்கு இரகசியமாக விஜயம் செய்தது ஏன் என்பது குறித்தும், அங்கு நடந்த “டீல்”களின் பிரதிபலனாகவே கூட்டமைப்பு, டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்க முடிவெடுத்ததா என்ற கோணத்திலும் சில தகவல்களை சேகரிக்கத் தொடங்கியிருக்கின்றராம்.

சீனத் தூதரகத்தில், கூட்டமைப்பின் இரண்டு எம். பிக்கள் நடத்திய இரகசிய சந்திப்பு, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு தெரியாமல் நடந்திருக்க முடியாது என்று நம்பும் அந்தத் தரப்பினர், அவ்வாறெனில் அந்த சந்திப்பு பற்றி மற்றைய கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு ஏன் தகவல் தெரிவிக்கப்படவில்லை என்பது குறித்தும், இவை இரகசியமாக வைக்கப்படுவதற்கான காரணம் குறித்தும் பல்வேறு கோணங்களில் தகவல்களை திரட்டிவருவதாக தெரியவருகின்றது.

அவர் பணம் பெற்றார் என்றும், இவர் பணம் பெற்றார் என்றும் எழுதிவிடலாம் அல்லது சொல்லிவிடலாம். ஆனால், அவற்றை எவராலும் எந்தக் கட்டத்திலும் நிரூபிக்கமுடியாது.

அதிகம் ஏன், பணம் பெற்றவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் யாருக்கு வாக்களித்தார்கள் என்பதையே கண்டுபிடிக்க முடியாது. இந்நிலையில், அவ்வாறு அடுத்த கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு கூட்டத்தில் பேசப்பட்டால் இதுபோன்ற பல அநாமதேய வதந்திகள் பல தரப்புக்களாலும் மாறிமாறி முன்வைக்கப்படலாம்.

எது எப்படியோ, நடக்கின்ற சம்பவங்களைப் பார்த்தால், கூட்டமைப்பை காலி பண்ணுவதென்று சிலர் கங்கணம்கட்டி பணியாற்றுவது போலவே தெரிகின்றது.

**- ஊர்க்குருவி.**

# யாழ். பல்கலை ஆய்வு மாநாட்டில் சிறப்பு வயலின் இசை கச்சேரி!

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீடத்தின் சர்வதேச ஆய்வு மாநாடான “மானுடம் 2022” இன் அங்குரார்ப்பணம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறுகிறது.

இதில், கலைப்பீடத்தின் முதலாவது பீடாதிபதியும் வரலாற்றுத்துறைப் பேராசியருமான கலாநிதி க. இந்திரபாலா மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியாரான சுஜீத் சிவசுந்தரம் ஆகியோர் திறப்புரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இசைத்துறையின் வயலின் இசை மாணவர்கள், பிரபல வயலின் இசைக் கலைஞரும் விரிவுரையாளருமான சுந்தரமூர்த்தி கோபிதாஸின் தயரிப்பில் “ஸ்வர சங்கமம்” என்ற அளிக்கையையும் அதனைத் தொடர்ந்து கோபிதாஸின் “விரலிசை” என்ற அளிக்கையும் சிறப்பு இசை நிகழ்ச்சியாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இசை நிகழ்ச்சிகள் மாலை 7 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றப்படுகின்றன. ஆய்வரங்கின் அங்குரார்ப்பண நிகழ்விலும் இசை நிகழ்ச்சியிலும் அனைவரும் கலந்துகொள்ளலாம்.

இரண்டாம் நாளான சனிக்கிழமை நாற்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பதின்மூன்று அமர்வுகளில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இந்த அமர்வுகளில் தென்னிலங்கை மற்றும் தமிழக ஆய்வாளர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இரண்டாம் நாள் அமர்வுக்கு முன் பதிவு செய்தவர்களே அனுமதிக்கப்படுவர் என்று மாநாட்டின் ஏற்பாட்டு குழுவினர் அறியத்தருகின்றனர். (ஐ)

# தனிஸ் அலி உட்பட 21 பேர் வெளிநாடு செல்வதற்கு தடை!

கொழும்பு, ஜூலை 29

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்து ஒளிபரப்பு சேவைகளுக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட “கோட்டா கோ கம“ போராட்ட செயல்பாட்டாளர் தனிஸ் அலி உட்பட 21 பேர் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவை நேற்றுப் பிறப்பித்துள்ளது.

இதேவேளை, டுபாய் செல்ல முயன்ற வேளை விமானத்துக்குள் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட தனிஸ் அலி எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் அவர் முற்படுத்தப்பட்ட போதே அவருக்கு விளக்கமறியலில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

# வரும்திங்கட்கிழமை முதல் மாணவர் வருகை உயரும்!

## கல்வி அமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 29

பாடசாலைகளில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வருகை திங்கட்கிழமை மேலும் மேம்படும் என எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களில் 80 சதவீத ஆசிரியர்களும், 73 சதவீத ஆசிரியர்களும் பாடசாலைக்கு வந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை போக்குவரத்து சபை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் பாடசாலை வாகனம் மற்றும் தனியார் பஸ் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடியதை அடுத்து, பாடசாலை போக்குவரத்து முறையை மேம்படுத்தும் வகையில் இலங்கை போக்குவரத்து சபை சாலைகள் ஊடாக எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பல்வேறு காரணங்களால் தாமதமான பல தேசியப் பரீட்சைகள் நடத்தப்பட்ட நிலையில், நிலுவையில் உள்ள எஞ்சிய பரீட்சைகளை விரைவில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கூடிய விரைவில் வழமையான பரீட்சை கால அட்டவணைக்கு திரும்புவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் கூறினார்.



# பிரிட்டன் உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 29

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹில்டனுக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் ருவிட்டர் குறிப்பொன்றை வெளியிட்டுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர், பல விடயங்கள் தொடர்பில் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றதாக குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை தொடர்பான செயல்முறை மற்றும் மனித உரிமைகளுக்கு இணங்குவது உட்பட பல விடயங்களில் கவனம் செலுத்தியதாகவும் அவர் குறிப்பிடுகிறார். (ஐ)

## ரம்புக்கனை துப்பாக்கி சூடு 4 பொலிஸாருக்கு மறியல்!

கொழும்பு, ஜூலை 29

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கேகாலை முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே. பி. கீர்த்திரத்ன உள்ளிட்ட நால்வர் எதிர்வரும் 10ஆம் திகதி வரை மீளவும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு நேற்று கேகாலை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரையில் பொலிஸ் 125 அதிகாரிகளிடமும் 120 பொது மக்களிடமும் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக இதன்போது குற்றப் புலனாய்வு பிரிவினர் நீதிமன்றுக்கு அறியப்படுத்தினர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
29.07.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆடி 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஜூலை ஒப்பந்தம் - 35 வருடங்கள்

தமிழர் அரசியலை பொறுத்தவரையில் ஜூலை மாதம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். 1983 ஜூலையில், தமிழ் மக்கள் பெருந்தொகையில் படுகொலை செய்யப்பட்டனர். சொத்துக்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. அப்போது, இலங்கையின் ஆட்சியாளராக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தன, சிங்கள காடையர்களின், தமிழர் விரோத செயல்பாடுகளை தடுக்கவில்லை. இந்தப் பின்புலத்தில்தான், இந்தியா நேரடியாக விடயங்களில் தலையீடு செய்தது. இதனைத் தொடர்ந்தே, சிங்கள காடையர்களின் அட்டகாசத்தை ஜே. ஆர். முடிவுக்குக் கொண்டுவந்தார்.

தமிழ்த் தேசிய அரசியலை பொறுத்தவரையில், ஜூலை மாத நிகழ்வுகள், திருப்புமுனையாக அமைந்தன. இடம்பெற்ற சம்பவங்களும், அதன் மூலம் ஏற்பட்ட தமிழ் கொந்தளிப்பும், ஆயுதப் போராட்ட இயங்கங்களை மேலும் எழுச்சியுறச் செய்தது. பெருந்தொகையான இளைஞர்கள், யுவதிகளை ஆயுத விடுதலை இயக்கங்களை நோக்கி ஈர்க்கப்பட்டனர்.

தமிழ்த் தேசிய எழுச்சியானது, ஆயுதப் போராட்ட இயக்கங்களின் எழுச்சிக்கு வழிவகுத்தது. இதுவே, மறுபுறம் இந்தியாவின் இராணுவ ரீதியான தலையீட்டுக்கு வழிவகுத்தது. இந்தியாவின் இராணுவ ரீதியான தலையீடு இரண்டு வகையில் இடம்பெற்றது. ஒன்று, தமிழ் ஆயுத இயக்கங்களுக்கு பயிற்சியளித்து, அவர்களை நேரடியாக, இந்தியா வழிநடத்தியது. அடுத்தது அமைதிப் படைகளை நிலைகொள்ளச் செய்தல். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட பிரதான ஐந்து இயக்கங்களும் இந்திய உளவுத் துறையான றோவினால், பயிற்சியளிக்கப்பட்டு, ஆயுதங்கள் வழங்கப்பட்டு போசிக்கப்பட்டவர்கள்தான். பயிற்சிகளை பெறுவதற்காகதான் மேற்கொண்ட, முயற்சிகளை பற்றி, விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியராக அறியப்பட்ட, அன்ரன் பாலசிங்கம், அவரின், ‘போரும் சமாதானமும்’ நூலில் விரிவாக எழுதியிருக்கின்றார்.

இவை அனைத்தினதும் விளைவாகவே, 1987 ஜூலை 29ஆம் திகதி, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வை காணும் நோக்கிலேயே, இந்த ஒப்பந்தம் இடம்பெற்றது. ஒப்பந்தம் இடம்பெற்று 35 வருடங்கள் ஆகின்றன. இந்த 35 வருடங்களில் தமிழர் அரசியலில் பல்வேறு விடயங்கள் நடந்து முடிந்துவிட்டது. ஆனாலும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற மாகாண சபை முறைமையை தவிர, வேறு எந்தவொரு விடயமும் இப்போது தமிழர்களிடத்தில் இல்லை. பல விடயங்கள் இருக்கின்றன என்று கூறப்பட்டாலும் கூட, அவையனைத்தும், விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் - என்னும் அடிப்படையில்தான் இருக்கின்றன. வெறும் விருப்பங்களும் எதிர்பார்ப்புக்களும் அரசியல் அடைவுகளாகிவிடாது.

இந்த 35 வருடங்களில் பல்வேறு விடயங்கள் இடம்பெற்றிருந்தாலும் கூட, ஈழத் தமிழர் விடயத்தில் தீர்மானகரமான வெளிசக்தியான, இந்திய பேரரசு, தமிழர் விடயத்தில், 13ஆவது திருத்தச் சட்டத்தையே ஒரு கொள்கை நிலைப்பாடாகக் கொண்டிருக்கின்றது. 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில், 13ஆவது திருத்தச்சட்டத்திலிருந்து - என்னும் அடிப்படையில்தான், இந்தியா விடயங்களை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. ஏனெனில், ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியாவின் தலையீட்டுக்கான அஸ்திபாரமாக இருப்பது, இந்திய - இலங்கை ஒப்பந்தம் மட்டுமேயாகும்.

இதேவேளை, தமிழர்கள் நம்பிக்கையுடன் நோக்கும், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக் கூறல் பிரேரணைகளிலும், அரசியல் தீர்வு தொடர்பான வலியுறுத்தலில், 13ஆவது திருத்தச்சட்டமே வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இதுவரை இந்தியாவினால் மட்டுமே வலியுறுத்தப்பட்டுவந்த குறித்த விடயம், தற்போது, ஐக்கிய நாடுகள் சபையிலும் எதிரொலிக்கின்றது. இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால், ஈழத் தமிழ் தரப்புக்கள் 13ஐ, சாதாரணரமாக தவிர்த்துவிட்டு, அரசியலில் ஒருபோதுமே பயணிக்க முடியாதென்னும் நிலைமையே அரசியல் யதார்த்தமாகிவிட்டது. யதார்த்தங்களை வார்த்தைகளால் புறம்தள்ளலாம் ஆனால், அவற்றின் மூலம் அரசியலில் ஆக்கபூர்வமான அடைவுகளை காண முடியாது.

யதார்த்தங்களை எதிர்கொள்ளும் தற்துணிவு ஈழத் தமிழ் அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் என்போருக்கு அவசியமானதாகும்.

# ஜனாதிபதி ரணிலின் ‘ஆடு புலி ஆட்டம்’ ஆரம்பம்!

அலசுவது இராஜதந்திரி

‘அரகலய’ என்று சிங்களத்தில் அழைக்கப்பட்ட காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவையடுத்து பாதுகாப்பு படையினரின் தடியடி பிரயோகத்தோடு ஒரு வாரத்துக்கு முன்னர் கலைக்கப்பட்டிருந்தது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதுமே மேற்கொண்ட முதலாவது நடவடிக்கையாக காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தை விரட்டியடித்தமை விளங்கியிருந்தது. தற்போது அந்த மூன்று மாத கால ஆர்ப்பாட்டத்தின் சூத்திரதாரிகளை களையெடுக்கும் நடவடிக்கைகள் படிப்படியாக ஆரம்பமாகியுள்ளமையே அவதானிக்க முடிகின்றது.

கடந்த செவ்வாய்கிழமை சிறீ லங்கன் விமான சேவை விமானத்தில் டுபாய் செல்வதற்கு விமானத்தினுள் ஏறி அமர்ந்திருந்த வேளை தானிஸ் அலி என்ற நபர் கைதானார். இவர் காலிமுகத்திடல் போராட்ட ஏற்பாட்டாளர்களில் முக்கியமானவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுப் பொலிஸார் இந்த நபரை கைதுசெய்தவேளை விமானத்தினுள் இருந்த ஏனைய பயணிகள் குறித்த நபரைக் கைது செய்ய வேண்டாமென சத்தமிட்டபோதிலும் மேலிடத்து உத்தரவின் பேரில் அவரைத் தாம் கைது செய்கின்றனர் எனக் கூறி குற்றப்புலனாய்வுப் பொலிஸார் அவரை கைத்தாங்கலாக விமானத்தினுள்ளிருந்தும் தூக்கிச் சென்று கீழிறக்கினர்.

தம்மைக் கைது செய்ய வேண்டாம் என்று தானிஸ் அலி சத்தமிட்டதோடு நாட்டை கொள்ளையடிக்கவோ அல்லது எவரையும் தாம் கொலை செய்யவோ இல்லை என்று கூச்சலிட்டதையும் கேட்க முடிந்தது. இருந்தபோதிலும் பொலிஸார் அவரை விட்டு வைக்காது விமானத்திலிருந்து தூக்கிச்சென்றனர். அச்சமயம் இலங்கை விமானப் பயணிகள் சிலர் இதுதான் இலங்கையில் நடக்கின்ற அராஜகம் என்று தெரிவித்தும் சத்தமிட்டனர்.

இதனையடுத்து, சமூகவலைத்தள செயல்பாட்டாளரான பதும் கேர்ணர் என்ற நபர் ஜூலை 13ஆம் திகதி பாராளுமன்ற கட்டிடத் தொகுதிக்கு செல்கின்ற வீதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ருஹூணு பல்கலைக்கழக மாணவர் சங்க முன்னாள் தலைவரும் அனித்தா என்ற பத்திரிகை ஆசிரியர்பீட முன்னாள் உறுப்பினருமான ஊடகவியலாளர் அன்தனி வேரங்கவும் நேற்றுமுன்தினம் கோட்டை ரயில் நிலையம் முன்பாகக் கைதாகியுள்ளார்.

இதுதவிர, காலிமுகத்திடல் தற்போது ஒரு தீவிர பாதுகாப்பு வலயமாகக் கொண்டுவரப்பட்டுள்ளதையடுத்து அங்குள்ள முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்கவின் சிலையை சூழவரவுள்ள 50 மீற்றர் பிரதேசம் ஆள்நடமாட்டத்துக்கு தடை விதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அப்பகுதியில் நடமாடியவர்கள் என்ற குற்றச்சாட்டில் நான்கு பேர் நேற்று முன்தினம் கைதாகி இன்றைய தினம் (29) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் வட்டாரங்களில் இருந்து கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நெறிப்படுத்தலின் கீழ் காலிமுகத்திடல் சூத்திரதாரிகள் மற்றும் முன்னணியில் நின்றோர் தொடர்பாக தீவிர விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இதுதவிர, கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தினுள் பிரவேசித்து அங்கே கும்மாளமடித்தவர்கள் குறித்து விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அத்துடன், அந்த வாசஸ்தலத்திலிருந்த பொருட்கள் சிலவற்றை திருடியவர்கள் என்று குறிப்பிடப்பட்ட சில நபர்களும் கைதாகியுள்ளனர்.

தமது பிடியை மேலும் இறுக்கி எந்த வடிவிலுமான ஆர்ப்பாட்டங்களையும் முறியடிக்கும் விதத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடித்துள்ளார். அவசரகாலச்சட்ட நீடிப்புக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 50 வாக்குகளும் பாராளுமன்றில் கிடைத்திருந்தன. ஜனாதிபதியாக பதவியேற்றதை அடுத்து ரணில் விக்கிரமசிங்க படிப்படியாக அவர் தமது பிடியை இறுக்கி வருவதையே அவதானிக்க முடிகின்றது.


இந்தத் தருணத்தில் அரசியல் ரீதியாக ஒரு தளம்பலான போக்கே தற்போது இலங்கையில் நிலவுகின்றது. அத்துடன், தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் காணப்பட்டதைப் போல ஆங்காங்கே சூட்டுச் சம்பவங்களும் மர்ம நபர்களால் கொழும்பின் சுற்றுப்புறப் பகுதிகள் சிலவற்றில் கடந்த சிலதினங்களில் நடத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை அவர் தற்போதுள்ள அரசியல்வாதிகளில் அனுபவம் நிறைந்தவராகவே இருக்கின்றார். எனவே, அவர் ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்தது முதல் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் உடனுக்குடன் தீர்மானங்களை எடுத்து காலதாமதங்களுக்கு இடம்தராது நிறைவேற்றப்படுபவையாக இருக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ இராணுவப் பின்னணியைக் கொண்டவராக இருக்கலாம். அத்துடன், அரசியல் பின்னணியைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். ஆனால், அவரால் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாகவோ அல்லது அதுகுறித்த அரசியல் சவால்களை கையாளுவது குறித்தோ எவ்வித செயல்திட்டங்களும் காணப்பட்டிருக்கவில்லை.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நீண்டகால அரசியல் பின்னணி தீர்க்கமான தீர்மானங்களை அவருக்கு எடுக்க உதவியுள்ளதென்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக இருக்கின்றது. இதன்மூலம் ரணில் தமது “ஆடு புலி ஆட்டத்தை“ ஆரம்பித்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
முன்னோர் வழிபாடு நலன் தரும். அரசு வழியிலான முயற்சி நிறைவேறும். எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.பணிபுரியும் இடத்தில் செல்வாக்கு உயரும்.

**இடபம்**
நீண்டநாள் முயற்சி நிறைவேறும். வழக்கு உங்களுக்கு சாதகமாகும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் தடைகள் விலகும். கொடுக்கல் வாங்கல் சீராகும்.

**மிதுனம்**
குடும்பத்தில் குழப்பம் விலகும். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை உண்டாகும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். பொருளாதார நிலை உயரும். புதிய ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடுவீர்கள்.

**கடகம்**
எதிலும் அவசரம், ஆவேசம் வேண்டாம். அமைதியாக செயல்படுங்கள்.செயல்களில் குழப்பம் உண்டாகும். ஒரே நேரத்தில் பல வேலைகளை சந்திப்பீர்கள். முயற்சியில் கவனம் தேவை.

**சிம்மம்**
திடீர் செலவால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். முயற்சி இழுபறியாகும். பணிபுரியும் இடத்தில் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். கோபத்தை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் பிரச்னை தோன்றும்.

**கன்னி**
நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். எதிர்பார்த்த வரவு வந்து சேரும்.நெருக்கடிகளில் இருந்து விடுபடுவீர்கள். பொருளாதார நிலை உயரும்.குடும்பத் தேவை நிறைவேறும்.

**துலாம்**
சுறுசுறுப்பாக செயல்பட்டு உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.தொழிலை விருத்தி செய்வீர்கள். சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு ஏற்படும்.செல்வாக்கு உயரும்.

**விருட்சிகம்**
இரண்டு நாட்களாக இருந்த நெருக்கடி விலகும். எதிர்பார்ப்பு நிறைவேறும். மனதில் ஏற்பட்ட குழப்பம் விலகும். பழைய பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். செல்வாக்கு உயரும்.

**தனுசு**
முன்னோர் வழிபாடு நன்மை தரும். சந்திராஷ்டமம் என்பதால் கவனம் தேவை.எதிர்பார்ப்பு இழுபறியாகும். விரோதிகளால் சில சங்கடங்கள் உண்டாகும். முயற்சிகளில் தடைகள் ஏற்படும்.

**மகரம்**
குடும்பத்தினரின் ஒத்துழைப்புடன் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.நண்பர்களால் நன்மை அதிகரிக்கும். உங்கள் விருப்பம் நிறைவேறும். எதிர்பார்த்த செய்தி வரும்.

**கும்பம்**
எதிர்ப்பு விலகும். துணிச்சலுடன் செயல்பட்டு எண்ணியதை அடைவீர்கள்.முன்னோர் வழிபாட்டில் மனம் மகிழ்வீர்கள். உங்கள் விருப்பம் நிறைவேறும்.எதிர்பாராத வரவு வந்து சேரும்.

**மீனம்**
குடும்ப நன்மைக்காக எதிர்கால திட்டம் ஒன்றை மேற்கொள்வீர்கள்.பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சிந்திப்பீர்கள். சேமிப்பில் கவனம் செல்லும். உறவினர்களுடன் ஏற்பட்ட பிரச்னை விலகும். சொத்து பிரச்னை சுமூகமாகும்.

# வெளிநாட்டு பல்கலை இருக்கைகளில் தமிழ் பேராசிரியர்களை நியமியுங்கள்

## வைகோ அரசிடம் கோரிக்கை

சென்னை, ஜூலை 29

வெளிநாட்டுப் பல்கலைக்கழக தமிழ் இருக்கைகளில் தமிழ்ப் பேராசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ வேண்டுகோள் விடுத் துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது,

“இந்திய அரசின் கலாசாரத் துறையின் கீழ் செயல்படும் இந்திய கலாசார உறவுகளுக்கான மன்றம்சார்பில், வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களில் சமஸ்கிருதம், ஹிந்தி, தமிழ், வரலாறு, பொருளாதாரம், தத்துவம், பெங்காலி நாட்டுப்புற நடனம், உருது, புத்தமதம் மற்றும் இந்திய கல்வி என சுமார் 11 வகை பாடப் பிரிவுகளுக்கான இருக்கைகள் 1970 ஆம் ஆண்டு முதல் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

இவ்வாறு அமைந்துள்ள வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான இருக்கைகள் நூற்றுக்கும் மேற்பட்டவை 2014ஆம் ஆண்டி லிருந்து படிப்படியாகக் குறைந்து விட்டன. தற்போது 51 இருக்கைகள் மட்டுமே எஞ்சி உள்ளன. இதிலும் அதிகபட்சமாக ஹிந்தி மொழியும், அடுத்த நிலையில் சமஸ்கிருதமும் இருக்கின்றன.

இந்தப் பட்டியலில், போலந்து நாட்டின் வார்ஸா பல்கலைக் கழகத்திலும், கிராக்கூப்யாகி எலோனியன் பல்கலைக் கழகத்திலும் தமிழுக்காக வெறும் இரண்டு இருக்கைகள் அமைந்துள்ளன. இவற்றுக்குக் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் பேராசிரியர்கள் அமர்த்தப்படவில்லை. கடந்த 2015இல் கேரளா பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் ஜெயகிருஷ்ணன் ஐ. சி. சி. ஆர். மூலம் தேர்வு செய்யப்பட்டார். ஆனால் அவரையும் இந்திய அரசு போலந்துக்கு அனுப்பவில்லை.

தற்போது, வெளியிடப்பட்ட இருக்கைகளுக்கான விளம்பரத்தில், தமிழ் இடம் பெற்றுள்ளது. ஆனால், பேராசிரியர் பணி இடங்களுக்கு விண்ணப்பிக்கும் ஐ. சி. சி. ஆர். இணைய தளத்தில் தமிழ் இடம்பெறவில்லை. ஐ. சி. சி. ஆர். மூலம் வெளிநாட்டு இருக்கைகளுக்கு தேர்வு செய்யப்படும் பேராசிரியர்களுக்கு ஊதியத்தை இந்திய அரசு வழங்கும். உணவு மற்றும் தங்கும் வசதிகளை தொடர்புடைய நாடுகளின் கல்வி நிறுவனங்கள் வழங்குகின்றன.

இந்நிலையில், வார்ஸா பல்கலைக் கழகத்தில் 48 ஆண்டுகளாக இந்திய மொழிகளில் தமிழ் இருக்கை இடம் பெற்றுள்ளது. கிராக்கூப் யாகி எலோனியன் பல்கலைக் கழகத்தில் 2008 ஆம் ஆண்டு முதல் தமிழ் இருக்கை அமைந்திருக்கிறது. 2014 இல் ஒன்றிய பா.ஜ.க. அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபின்னர், கடந்த எட்டு ஆண்டுகளாக தமிழ்த் துறையின் பேராசிரியர் பணி இடங்கள் நிரப்பப்படவில்லை என்பது வேதனை அளிக்கிறது.

தற்போது இந்திய கலாசார உறவுகளுக்கான மன்றம் வெளியிட்டுள்ள அறிவிப்பிலும் தமிழ்ப் பேராசிரியர்கள் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்படவில்லை. தமிழ் மொழியின் மீதும், திருக்குறள் மீதும் ஆர்வமும் பற்றும் உடையவராக தன்னை முன்னிறுத்திக் கொள்ளும் பிரதமர் நரேந்திர மோடி, வெளிநாட்டு கல்வி நிறுவனங்களில் தமிழ் இருக்கைகள் அமையவும், தமிழ்த் துறைப் பேராசிரியர்கள், ஆய்வு அறிஞர்களை நியமனம் செய்யவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துகிறேன்.” - என்றுள்ளது. (ஐ)

### அ. தி. மு. க. கட்சி விவகாரம்:

# பன்னீர்செல்வம், பழனிசாமி தரப்பை சமரசப்படுத்தும் முயற்சியில் மோடி?

சென்னை, ஜூலை 29

அ.தி.மு.கவில் ஒற்றைத் தலைமை பிரச்னையில் எடப்பாடி பழனிசாமிக்கும், ஓ. பன்னீர் செல்வத்துக்கும் இடையே மோதல் வெடித்தது. இதையடுத்து பெருவாரியான பொதுக்குழு உறுப்பினர்களின் ஆதரவுடன் எடப்பாடி பழனிசாமி இடைக்கால பொதுச்செயலாளராக பொறுப்பெற்றார்.

கட்சியில் இருந்து ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் நீக்கப்பட்டார்கள். ஆனால், எந்த நடவடிக்கையை கண்டும் அசராமல் அவரும் எடப்பாடி தரப்பு ஆதரவாளர்களை நீக்குவதாக அறிவித்து புதிய மாவட்ட செயலாளர்களை நியமித்து வருகிறார்.

இந்நிலையில், இரு தரப்பும் தேர்தல் ஆணையத்திடம் தனித்தனியாக மனுக்களையும் கொடுத்தார்கள். இது ஒருபுறம் இருக்க கூட்டணி கட்சியான அ.தி.மு.கவுக்குள் ஏற்பட்டு உள்ள மோதலை முடிவுக்கு கொண்டு வர பாரதிய ஜனதா விரும்புகிறது.

முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பிரிவுபசார விருந்தில் பங்கேற்பதற்காக டில்லி சென்ற எடப்பாடி பழனிசாமி பிரதமரை தனியாக சந்தித்து பேசுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் ஆலோசனை நடத்தவில்லை.

இந்த நிலையில் சர்வதேச செஸ் போட்டியை தொடங்கி வைக்கவும், அண்ணா பல்கலைக்கழகத்தில் நேற்று சென்னை வந்துள்ளார் பிரதமர் மோடி.

இரு நாட்கள் தங்கியிருக்கும் அவரை சந்திக்க பன்னீர்செல்வமும், பழனிசாமியும் தனித்தனியாக நேரம் கேட்டுள்ளனர். இருவருக்கும் நேரம் ஒதுக்கப்படாதம நிலையில், இருவரையும் ஒரே நேரத்தில் அழைத்து சமரசப்படுத்தும் பேச்சை ஆரம்பிக்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதன்போது, இருவரையும் சேர்ந்து இயங்குமாறு மோடி கூறுவார் என்றும் கூறப்படுகின்றது. இதனிடையே, இரு தரப்பினரும் மோடியின் இந்த சமரச திட்டத்துக்கு உடன்படுவதில்லை என்று முடிவு செய்துள்ளனர் என்றும் உயர் வட்டாரங்களை மேற்கோளிட்டு தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஐ)

# அ. தி. மு. க. ஒற்றை தலைமை; உச்சநீதிமன்றில் புதிய வழக்கு!

சென்னை, ஜூலை 29

அ.தி.மு.க.வில் ஒற்றை தலைமை விவகாரம் தொடர்பாக எடப்பாடி பழனிசாமிக்கும், ஓ. பன்னீர்செல்வத்துக்கும் இடையே மோதல் நீடித்து வருகிறது.

சென்னை வானகரத்தில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி கட்சியின் இடைக்கால பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். அன்றைய தினம் ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. அலுவலகத்தில் ஓ.பன்னீர்செல்வம் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.

தற்போது அந்தக் கட்சியில், இ. பி. எஸ். அணி, ஓ.பி.எஸ். அணி என 2 அணிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அ.தி.மு.க. பொதுக் குழு கூட்டத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் ஓ. பன்னீர் செல்வம் சார்பில் கடந்த சில நாட்களுக்கு முன்பு வழக்கு போடப்பட்டது.

இது தொடர்பாக ஓ.பி.எஸ். தரப்பினர் தாக்கல் செய்த மனுவில் அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் ஒருங்கிணைப்பாளரின் கையெழுத்து இல்லாமல் உரிய இடைவெளி இன்றி நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இதனை செல்லாது என்று அறிவிக்க வேண்டும். பொதுக்குழு கூட்டம் தொடர்பாக உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை இன்று நடைபெறவுள்ளது. இந்த நிலையில் எடப்பாடி பழனிசாமி தரப்பில் அ.தி.மு.க. தலைமை கழகம் என்ற பெயரில் தலைமை செயலாளரான எஸ்.பி. வேலுமணி சார்பில் உச்ச நீதிமன்றில் புதிய கேவியட் மனு நேற்று தாக்கல் செய்துள்ளார்.

அதில், அ.தி.மு.க.வில் தற்போது ஒருங்கிணைப்பாளர் பதவி இல்லை. பொதுக்குழு கூட்டத்தில் அங்கீகாரம் பெறாததால் அந்த பதவி காலாவதியாகி விட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீடிக்கும் அரசியல், பொருளாதார நெருக்கடி; இலங்கை-இந்திய வர்த்தகம் பெரும் வீழ்ச்சி!

புதுடில்லி, ஜுலை. 29

**இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி தொடர்ந்து கீழ்நோக்கி செல்வதால், அண்டை நாடான இந்தியா வுடனான வர்த்தகம் நிறுத்தப்பட்டு வருகிறது.**

இதனை இந்திய செய்திச்சேவை ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கைப் பங்காளிகளிடமிருந்து பணம் வராது என்ற அச்சத்தில் பல இந்திய ஏற்றுமதியாளர்கள் வர்த்தகத்தை நிறுத்தி வைத்துள்ளனர்.

இந்தியா இலங்கையின் மூன்றாவது பெரிய வர்த்தகப் பங்காளியாகும். மேலும் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்கும் நாடுகளில் ஒன்றாகும்.

பெருகிவரும் இயல்புநிலை அபாயங்கள் காரணமாக இலங்கையின் கொள்வனவாளர்களிடம் இருந்து புதிய கட்டளைகளை பெறுவதில் தாம் தயங்குவதாக மும்பையைச் சேர்ந்த ஒரு சிறந்த சீனி ஏற்றுமதியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒவ்வொரு மாதமும் நுகரும் 40000-50000 தொன் சீனியில் 90 வீதம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

பொறியியல் பொருட்கள், இரசாயனங்கள், இரும்பு, விவசாயப் பொருட்கள், எரிபொருள், மருந்துப் பொருட்கள், பால் மா, வெங்காயம் மற்றும் திராட்சை ஆகியவை இலங்கைக்கான இந்திய ஏற்றுமதிகளில் உள்ளடங்குகின்றன.

2021-2022 நிதியாண்டில் இந்தியா குறைந்தது 5.8 பில்லியன் டொலர் மதிப்பிலான பொருட்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

இந்த ஆண்டு இந்த எண்ணிக்கை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் முற்றிலுமாக நின்றுவிட்டன.


இந்தநிலையில் அரசியல் நெருக்கடி மற்றும் பணம் செலுத்தும் பிரச்னைகள் காரணமாக ஏற்றுமதியாளர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பதாக இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு துணைத் தலைவர் காலித் கான் இந்தியாவின் எக்கனாமிக் ரைம்ஸ் செய்தித்தாளிடம் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் மொத்த போக்குவரத்து சரக்குகளில் 60 வீதமும் மற்றும் கொள்கலன் போக்குவரத்தில் 30 வீதமும் கொழும்பு துறைமுகத்தால் கையாளப்படுகிறது.

எனினும் இலங்கையின் நெருக்கடியானது துறைமுக செயற்பாடுகளை பாதிக்கின்றது என்றும் இந்திய செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது. (அ)

## போராடும் இளைஞர்களின் கோரிக்கையை ஏற்கிறேன்!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜுலை. 29

நாட்டில் உள்ள முறைமையை மாற்ற வேண்டும் என்ற போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் புறக்கோட்டையில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் அதன் பணியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, கட்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷமல் செனரத் மற்றும் பலர் இதில் கலந்துகொண்டனர்.

நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கு அனைவருக்கும் அனுமதி உண்டு எனவும், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் அதே உரிமை உண்டு எனவும் பல்வேறு திறமைகளை கொண்ட இளைஞர் யுவதிகள் இதில் இணைவதை தான் பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாடு மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருந்தவேளையில் தான் ஜனாதிபதியாக பதவியேற்றதாக தெரிவித்த அவர், பொருளாதார சவாலை முறியடித்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் கூறினார். (அ)

## கோவிட் அறிகுறி கொண்ட மாணவரை பாடசாலைகளுக்கு அனுப்பவேண்டாம்!

கொழும்பு, ஜுலை. 29

கோவிட்-19 நோய் அறிகுறிகள் கொண்ட மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதை தவிர்க்குமாறு சுகாதார தரப்பினர் பெற்றோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காய்ச்சல், தடுமன் மற்றும் தொண்டை வலி உள்ளிட்ட நோய் அறிகுறிகள் கொண்ட மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதை தவிர்க்குமாறு கோரப்பட்டுள்ளது.

அவ்வாறான அறிகுறிகள் கொண்ட மாணவர்களை உடனடியாக வைத்தியரிடம் அழைத்து செல்லுமாறு சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்தியர் தீபால் பெரேரா குறிப்பிட்டார். (அ)

## ஜனாதிபதியின் இல்லத்தில் பணம் எண்ணியவர் கைது!

கொழும்பு, ஜுலை. 29

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார் என்ற சந்தேகத்தின் பேரில் 26 வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜுலை மாதம் 09ஆம் திகதி ஜனாதிபதியின் இல்லத்தை பொதுமக்கள் முற்றுகையிட்டதன் பின்னர், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு 14, மல் மாவத்தையினைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அத்துடன், குறித்த சந்தேக நபர் கொழும்பு சேனியா வீதியிலுள்ள கடையொன்றில் பணிபுரிந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் பொது மக்கள் அரச கட்டடத்தை முற்றுகையிட்டதன் பின்னர் காணப்பட்ட பணத்தை எண்ணிக்கொண்டிருந்த ஒருவரே இவர் என்பதும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் கண்டெடுக்கப்பட்ட பணத்தை சிலர் எண்ணும் வீடியோ காட்சி சமூக ஊடகங்களில் பகிரப்பட்டதன் மூலம் அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். (அ)

## ரஞ்சன் விரைவில் விடுதலை



கொழும்பு, ஜுலை. 29

ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலை தொடர்பான அனைத்து ஆவணங்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்கு சட்டமா அதிபரின் மேலும் ஒரு பரிந்துரை ஆவணம் தேவை என தெரிவித்த ஹரீன் பெர்னாண்டோ, அது கிடைத்தவுடன் ரஞ்சன் ராம நாயக்கவின் விடுதலை கடிதத்தில் ஜனாதிபதி கையொப்பமிடுவார் எனவும் தெரிவித்தார். (அ)

## வீடு புகுந்து துப்பாக்கிச் சூடு; ஓட்டோச் சாரதி உயிரிழப்பு!

கொழும்பு, ஜுலை. 29

இரத்மலானை பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஓட்டோச் சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கல்கிஸை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரத்மலானை - சில்வா மாவத்தை பகுதியில், நேற்று முன் தினம் இரவு வீடொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீட்டினுள் நுழைந்த இருவர் அங்கிருந்த நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்த குறித்த நபர் களுபோவிலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்மலானை - சில்வா மாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய ஓட்டோச் சாரதி ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

கொலைக்கு ரி-56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## ரணில் விக்கிரமசிங்கவுக்கு பங்களாதேஷ் பிரதமர் வாழ்த்து

கொழும்பு, ஜுலை. 29

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில்,

உங்கள் அனுபவச் செல்வம், ஞானம் மற்றும் அரசியல் புத்திசாலித்தனம் இலங்கையில் விரும்பிய சமாதானம் மற்றும் சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கும் என நம்புகிறேன். உங்கள் முயற்சிகள் வெற்றியடைய வாழ்த்துகிறேன் என குறிப்பிட்டுள்ளார். (அ)

## சூட்டுக்கு இலக்கான பாஸ் பொட்டா பலி!

கொழும்பு, ஜுலை. 29

கம்பஹா நீதிமன்ற வளாகத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுவந்த பாதாள உலகக்குழு உறுப்பினர் "பாஸ் பொட்டா" சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் முற்பகல் வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த "பாஸ் பொட்டா" என அடையாளம் காணப்பட்ட நபர் மீதே இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது. (அ)

# இலங்கைக்கு உடனடியாக உதவியளித்தது இந்தியா!

## அமெரிக்கா பாராட்டு

புதுடில்லி, ஜூலை. 29

**இலங்கைக்கு உடனடி நிவாரணம் வழங்க இந்தியா முன்வந்துள்ளதற்கு அமெரிக்க சர்வதேச உதவி நிறுவனத்தின் தலைவர் சமந்தா பவர் நன்றி தெரிவித்துள்ளார்.**



இந்தியாவுக்கு நன்றி தெரிவித்த சமந்தா பவர், சீனா வழங்கிய வெளிப்படைத்தன்மையற்ற கடன் உதவி குறித்து தனது அதிருப்தியையும் தெரிவிக் கவும் மறக்கவில்லை.

இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்துள்ள சமந்தா பவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்தியா ஏற்கனவே 16 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மனிதாபிமான உதவி களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை இறக்கு மதி செய்வதற்கு மேலும் 3.5 பில்லியன் அமெ ரிக்க டொலர்கள் கடனை வழங்கியதற்காக இந்தியாவுக்கு அவர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இதேவேளை, கடனுதவி வழங்குவதன் ஊடாக, சீனா இலங்கையை கடன் வலையில் சிக்க வைத்துள்ளதாகவும், 2000 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து, இலங்கைக்கான கடன்களை வழங்குவதில் சீனா பிரதானமாக இருந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சீனாவிடம் இருந்து இலங்கை பெற்றுள்ள வெளிப்படைத்தன்மையற்ற கடன்கள் மற்றும் அதிக வட்டி விகிதங்கள் மூலம் இலங்கை ஏற்க னவே கடுமையான நிதி நெருக்கடிக்கு மத்தியில் இருப்பதாக சமந்த பவர் மேலும் கூறினார்.

சீனாவின் கடனுதவியில் நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை விமான நிலையம் மற்றும் துறைமுகம் என்பன இலாப நோக்கற்ற திட்டங் களாக மாறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெ டுப்பதற்கு அவசியமான காரணியாக இருக்கும் சீன கடனை மறுசீரமைப்பதில் சீனா சாதகமாக பதிலளிக்காது எனவும் அவர் சந்தேகம் தெரி வித்தார்.

இந்த நேரத்தில் சீனா செய்ய வேண்டியது, இருக்கும் கடனை அடைக்க அதிக கடன்களை வழங்குவது அல்ல, ஆனால் ஒரு சலுகை காலத் திற்கு ஏற்ப கடனை மறுசீரமைப்பதற்கான ஒப்பந்தத்தை எட்டுவது என்று அவர் கூறினார்.

தற்போது இலங்கையின் மொத்த கடனில் சுமார் 15 வீதத்தை சீனா வைத்திருப்பதாகவும், சீனாவின் நடவடிக்கைகளில் இலங்கையின் எதிர்கால பொருளாதாரம் தங்கியிருப்பதாகவும் சமந்த பவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# ரணில் பதவி விலகும்வரை போராட்டங்கள் தொடரும்!

## வசந்த முதலிகே தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை. 29

அரசாங்கத்தினால் அமைக் கப்பட்டுள்ள கொழும்பு விகாரை மகாதேவி பூங்காவில் போராட்டம் நடத்த நாங்கள் தயாராக இல்லை என பல்க லைக்கழகங்களுக்கு இடை யிலான மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

யார் என்ன சொன்னாலும் நாட்டு மக்களுக்கான போராட் டம் காலி முகத்திடலில் தொட ரும் எனவும் அவர் குறிப்பிட் டார்.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் போராட்டக்காரர்க ளுக்காக இடம் ஒதுக்கப்படும் என அரசாங்கத்தின் பொது பிரதிநிதிகள் கூறுவது தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

எரிபொருள் நெருக்கடி, எரிவாயு நெருக்கடி உள்ளிட்ட நாட்டின் எரியும் பொருளா தார நெருக்கடிகளுக்கு தீர்வு வழங்காமல் மக்களை அடக்க அரசாங்கம் முயற்சிப்பதாகவும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலகும் வரை போராட்டம் தொடரும் எனவும் அவர் தெரி வித்தார். (அ)

# வெளிநாட்டுப் பணத்துடன் வெலிகமவில் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை. 29

வெலிகம பிரதேசத்தில் உண் டியல் முறையின் கீழ் வெளி நாட்டுப் பணத்தைப் பரிமாற் றிக்கொண்டிருந்த நபரொரு வரை விசேட அதிரடிப்படை யினர் கைது செய்துள்ளனர்.

வெலிகம, கல்பொக்க பிரதேசத்தில் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பில் குறித்த நபர் சிக்கியுள்ளார்.

சட்டவிரோதமான உண்டியல் முறையின் கீழ் வெளிநாட்டுப் பணத்தை மாற்றியமைக்காக கல்பொக்க பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பணத்தின் மொத்தப் பெறுமதி ஒரு கோடியே 67 லட் சம் ரூபா என தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க டொலர், யூரோ, பிரித்தானிய பவுண்ட்ஸ், திர் ஹாம் உள்ளிட்ட பல வெளி நாட்டு நாணயங்கள் அந்த நபரிடமிருந்து கைப்பற்றப்பட் டுள்ளன. (அ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை. 29

நாட்டில் டெங்கு நோயா ளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் அலுவ லகத்தின் உத்தியோகப்பூர்வ ருவிட்டர் பக்கத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அத்துடன், நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களில் 25 வீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் எனவும் குறிப்பி டப்படுகின்றது.

மேலும் டெங்கு நோயை பரப்பக்கூடிய அடிஸ் நுளம்பு காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரையிலும் தீவிரமாக கடிப்பதாக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகள் மூன்று வாரங்களின் பின்னர் திறக்கப் பட்டமையினால், டெங்கு நோய் பரவுவதனை தடுப்ப தற்கான வழிமுறைகளை தொடர்ந்து பின்பற்றுமாறு பெற்றோர் மற்றும் பொது மக்களை இலங்கையில் உள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் அலுவலகம் கேட்டுள்ளது. (அ)

# பாடசாலை மாணவர்களுக்கென ஓகஸ்ட் முதல் புதிய பஸ் சேவை

கொழும்பு, ஜூலை. 29

எதிர்வரும் முதலாம் திகதி முதல் பாடசாலை மாணவர்களுக்காக தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்தி, புதிய பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது காணப்படும் போக்குவரத்து சிக்கல் மற்றும் பாடசாலை போக்குவரத்து கட்டணங்கள் அதிகரித்துள்ளமையை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய, அனைத்து பாடசாலை களும் உள்ளடங்கும் வகையில் பாடசாலை ஆரம்பமாகும் நேரம் மற்றும் நிறைவடை யும் நேரம் என்பனவற்றை கவனத்திற் கொண்டு இந்த புதிய பஸ் சேவை முன்னெ டுக்கப்படுமென கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது.

பாடசாலை மாணவர்களின் போக்கு வரத்து நடவடிக்கைக்காக ஈடுபடுத்தப்படும் குறித்த பஸ்களுக்கு இலங்கை போக்குவ ரத்து சபை டிப்போ ஊடாக எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

இதனைத்தவிர, மாணவர்களுக்கான சிசுசெரிய பஸ் சேவையை முறையாக முன் னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து பிரச்சினை யால், வாரத்தில் 3 நாட்களுக்கு மாத்திரமே பாடசாலைகள் நடத்தப்படுகின்றன.

இந்நிலையில், அடுத்த வாரம் பாடசா லைகளை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து நாளை சனிக்கிழமை நடைபெறும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

# முன்னாள் ஜனாதிபதி கோட்டா நியமித்த கல்வி மேம்பாடு ஆணைக்குழு கலைப்பு

கொழும்பு, ஜூலை. 29

இலங்கையில் கல்வி மேம்பாடு, விரி வாக்கம் மற்றும் நவீன மயப்படுத்தலுக் கான பரிந்துரைகளுக்கென முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வினால் அமைக்கப்பட்ட கல்விக்கான ஜனாதிபதி ஆணைக்குழு உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் கலைக் கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விக்கான ஜனாதிபதி ஆணைக்குழு வின் செயலாளர் கே. ஆர். பத்மப்பிரிய இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

கடந்த 2019 ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டாபய ராஜக்ஷ, அரசியலமைப் பின் 33 ஆவது உறுப்பரைக்கமைவாக ஜனாதிபதிக்குண்டான அதிகாரத்தின் படி, 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி, 2169/2 ஆம் இலக்க விசேட வர்தமானி அறிவித்தல் மூலம் இலங்கை யில் கல்வி நடவடிக்கைகள் பற்றிய ஜனா திபதி ஆணைக்குழுவை ஸ்தாபித்தார்.

ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர் கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியில் மேற்கொள்ளப்பட வேண்டிய விரிவாக்கல் நடவடிக்கைகள் மற்றும் கல்வியை நவீனமயப்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளை ஜனாதிப திக்கு வழங்குவதும், காலத்துக்குக்காலம் கல்வி முன்னேற்றம் பற்றி அறிக்கைகளை வழங்குவதும் இந்த ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடுகளாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தன.

இலங்கையின் மூத்த துறைசார் நிபு ணர்கள், கல்வியியலாளர்கள், அனைத் துப் பல்கலைக் கழகங்களினது துணை வேந்தர்கள் மற்றும் உயர்கல்வி நிறுவ னங்களின் பணிப்பாளர்கள் உட்பட 31 பேர் ஸ்தாபக உறுப்பினர்களாக நியமக் கப்பட்டிருந்தனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து இந்த ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளதாக 27.07.2022 ஆம் திகதியக் கடிதம் மூலம் தனக்கு அறிவுறுத் தப்பட்டுள்ளது என்று கல்வி நடவடிக் கைகள் பற்றிய ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் குறப்பிட்டுள்ளார்.

இதேவேளை -

ஆட்சி மாற்றத்தின் பின், முன்னாள் ஜனாதிபதியினால் நியமனம் வழங்கப் பட்ட கூட்டுத் தாபனங்கள், அதிகார சபைகள் மற்றும் ஆணைக் குழுக்களின் உயர் பதவிகளிலும் பல மாற்றங்கள் ஏற்படவுள்ளன என்று அரச உயர் மட் டத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# மக்கள் வழங்கிய ஆணை முழுமையாகத் தோல்வி!

## விரைவில் பாராளுமன்றத் தேர்தல் வேண்டும் என்கிறார் மகிந்த தேசப்பிரிய

**கொழும்பு, ஜூலை 29**

**கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் ஆகிய இரண்டிலும் மக்களால் வழங்கப்பட்ட ஆணை தோல்வியடைந்துள்ளதால், விரைவில் பாராளுமன்றத் தேர்தலை நடத்தி மக்கள் ஆணையைப் பெறவேண்டும் என்று முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் தெரிவிக்கையில்-

ஜனநாயகத்துக்காக பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால், செலவு செய்வதற்கு நிறுவனங்கள் இருக்கின்றன. ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் போன்றவை அதற்கு உதாரணம்.

தேர்தலை நடத்த ஆயிரத்து 200 கோடி ரூபாய்களே செலவாகும். இத்தொகையை 600 கோடிகளாகச் சுருக்கித் தேர்தலை நடத்தவும் முடியும்.

எந்தவொரு கொடுப்பனவையும் பெறாமல் தேர்தல் கடமையைச் செய்யத் தயார் என அரச அதிகாரிகள் ஏற்கனவே அறிவித்துள்ளனர்-என்றார். (அ)

# சுயாதீன அணிக்குள் பிளவு?

கொழும்பு, ஜூலை 29

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற அவசரகாலச் சட்டம் மீதான வாக்கெடுப்பில் அரசாங்கத்தில் இருந்து விலகி சுயாதீனமாக இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அணியில் பிளவு ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்துள்ளது.

இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அணியில் அங்கம் வகிக்கும் விமல் வீரவன்ஸ, அவரது கட்சியை சேர்ந்த நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள், தேசிய காங்கிரஸின் தலைவர்.ஏ.எல்.எம்.அதாவுல்லா, இலங்கை மகஜன கட்சியின் தலைவர் அசங்க நவரத்ன, பிரேம்நாத் சி தொலவத்த ஆகியோர் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அதேவேளை அத்துரலிய ரதன தேரர், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார, கம்யூனிஸ்ட் கட்சியின் வீரசுமண வீரசிங்க, லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண, கெவிந்து குமாரதுங்க, பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் உதய கம்மன்பில ஆகியோர் வாக்கெடுப்பில் கலந்துக்கொள்ளவில்லை.

இவர்களை தவிர மேலும் 35 பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பு நடந்த நேரத்தில் பாராளுமன்ற அவையில் இருக்கவில்லை.

சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள் அணியின் வசந்த யாப்பா பண்டார, உதயன கிரிந்திகொட ஆகியோர் அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர். (அ)

# எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில் துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, ஜூலை 29

பதுளை - பசறை பிரதான வீதியில் ஹிந்தகொட பகுதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 12.05 மணியளவில் இடம்பெற்றுள்ளது என பதுளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியருக்கும், வியாரகொட பகுதியைச் சேர்ந்த எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வந்த நபருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தகராறினால், எரிபொருளைப் பெற்றுக் கொள்ள வந்த நபர் 9 மி.மி. ரக கைத்துப்பாக்கியால் வானத்தை நோக்கி நான்கு தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

எவருக்கும் எந்தவிதமான காயங்கள் ஏற்படாத போதிலும் சந்தேகநபரைக் கைதுசெய்யும் வகையில் விசாரணைகளைப் பதுளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்களை வைத்திருப்போரும் பதிவு செய்யலாம்!

கொழும்பு, ஜூலை 29

பல வாகனங்களைக் கொண்ட வர்த்தகர்கள் தேசிய எரிபொருள் அனுமதிச் சீட்டைப் பெறுவதற்கு வணிகப் பதிவு இலக்கத்துடன் அனைத்து வாகனங்களையும் பதிவு செய்ய முடியும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இயந்திரங்களுக்கான எரிபொருள் தேவைகள் வாராந்த எரிபொருள் தேவைகளுடன் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்படவேண்டும் என்று அமைச்சர் கூறினார். (அ)

# நாட்டில் தற்போதுள்ள அரசு குறித்து சர்வதேசத்திடம் நம்பிக்கை இல்லை

## கூறுகிறார் எரான் விக்ரமரத்ன



கொழும்பு, ஜூலை 29

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் குறித்து சர்வதேச ரீதியில் நம்பிக்கை ஏற்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிரந்தரமான அரசியல் பலம் இல்லாத உண்மையான மக்கள் ஆணையை பிரதிநிதித்துவப்படுத்தாத அரசாங்கம் சம்பந்தமாக மக்களுக்கும் நம்பிக்கை ஏற்படாது.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கவேண்டும் அல்லது மீண்டும் பொதுத் தேர்தலை நடத்தி மக்கள் எதிர்பார்க்கும் விதத்திலான அரசாங்கம் உருவாக இடமளிக்கவேண்டும்.

தேர்தலில் யார் ஆட்சிக்கு வந்தாலும் நாட்டில் நிலவும் நெருக்கடியை தீர்ப்பதற்கு மேலும் பல காலம் செல்லும். அத்துடன் நெருக்கடிக்கு தீர்வு காண ஜனரஞ்சகமற்ற சில தீர்மானங்களை எடுக்கவேண்டும்-என்றார். (அ)

# நாட்டு மக்களின் பக்கம் நின்று மனச்சாட்சிப்படி செயல்படுவோம்

## டலஸ் அழகப்பெரும கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 29

"எமது அணி அரசியல் சூழ்ச்சி செய்யவில்லை. மக்கள் பக்கம்நின்று, மனசாட்சியின் பிரகாரமே செயற்பட்டு வருகின்றோம்." - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"அரசியல் கலாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டேன். அது அரசியல் சூழ்ச்சி கிடையாது. நான் ஜனாதிபதியாகி இருந்தால், சர்வகட்சி அரசு அமைந்திருக்கும். நிச்சயம் மாற்றம் வந்திருக்கும்.

எண் கணித அடிப்படையில் நான் தோற்றிருக்கலாம். ஆனால் அரசியல் ரீதியில் தோற்கவில்லை. மக்கள் எம் பக்கமே நிற்கின்றனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டதை ஏற்கமுடியாது. அதனால்தான் எதிர்த்து வாக்களித்தோம்."

எனவும் டலஸ் அழகப்பெரும குறிப்பிட்டார். (அ)

# அவசரகால சட்டம் அவசியமில்லை!

## கூறுகிறார் ஜி.எல்.பீரிஸ்



கொழும்பு, ஜூலை 29

தற்போதைய சூழ்நிலையில் அவசரகாலச் சட்டம் அவசியமில்லை என்பதாலேயே அதற்கு எதிராக வாக்களித்திருந்ததாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவசரகாலச் சட்டமென்பது நாட்டுக்கு அவசியமானது எனவும், அதனை அமுல்படுத்துபோது தூரநோக்கு சிந்தனை இருக்கவேண்டும் எனவும் அவர் கூறினார்.

எனினும், தற்போதைய சூழ்நிலையில் அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாத செயல் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், அவசரகால சட்டம் வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம் எனவும் ஜி.எல். பீரிஸ் கூறினார். (அ)

# டலஸ், பீரிஸ் உள்ளிட்டோரை விரட்ட தயாராகிறது மொட்டு!

கொழும்பு, ஜூலை 29

அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக்களித்த டலஸ் அழகப்பெரும, ஜி.எல். பீரிஸ் உள்ளிட்ட தமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தீர்மானித்துள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதில் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அவசரகால நிலைமைப் பிரகடனம் தொடர்பான தீர்மானம், பாராளுமன்றத்தில் 57 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

அவசரகால எதிராக 63 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

டலஸ் அழகப்பெரும, ஜி.எல்.பீரிஸ், டிலான் பெரேரா உட்பட மொட்டு கட்சி எம்.பிக்கள் சிலரும் எதிராக வாக்களித்தனர். அவர்களுக்கு எதிராகவே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (அ)

# -தமிழக அரசியல்-

# அரசியல் சதுரங்கத்தில் அடுத்த நகர்வு என்ன?

**இரட்டை இலை சின்னம் முடங்கும் நிலையில், திராவிட கருத்தியலுக்கு எதிராக தமிழ் தேசியம், ஹிந்துத்துவ கருத்தியல்கள் வலுப்பெறக் கூடும். இதன்மூலம், பலமுனைப் போட்டியால் உத்தரபிரதேசம், பிகார், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் ஜனதா தளம் உடைந்து பாஜக வலுப் பெற்றதுபோல தமிழகத்திலும் பாஜக வலுப்பெறும் என்பது அந்தக் கட்சியில் சிலரது நம்பிக்கை.**

சதுரங்க ஒலிம்பியாட் போட்டியை சென்னையில் பிரதமர் மோடி தொடக்கிவைக்கும் நிலையில், தமிழக அரசியல் சதுரங்கத்தில் அடுத்த நகர்வு என்ன என்பதை அறிய அரசியல் ஆர்வலர்கள் காத்திருக்கின்றனர்.

அதிமுகவின் எடப்பாடி கே.பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரில் பிரதமர் மோடியின் ஆதரவு யாருக்கு என்பதற்கான போட்டி இப்போது உருவாகியுள்ளது. இரு தரப்பினருமே மோடியின் ஆதரவைப் பெற முயற்சி செய்து வருகின்றனர்.

தில்லிக்கு 4 நாள் பயணமாக சென்ற அதிமுகவின் இடைக்கால பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி, பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரை தனிப்பட்ட முறையில் சந்திக்க நேரம் கிடைக்காததால், பயணத் திட்டத்தை பாதியிலேயே முடித்துக் கொண்டு சென்னைக்குத் திரும்பியதாக ஊடகங்களில் செய்தி வெளியானது.

குடியரசுத் தலைவர் பதவியேற்பு விழாவின்போது, பிரதமர் மோடி முக்கிய அலுவல்களில் இருந்ததால் எடப்பாடி பழனிசாமியை சந்திக்க வில்லை என்றும், சென்னையில் நிச்சயம் சந்திப்பார் என்றும் அவரது தரப்பினர் காத்திருக்கின்றனர்.

குடியரசு துணைத் தலைவர் பதவிக்காக ஜகதீப் தன்கர் வேட்புமனு தாக்கல் செய்தபோது, ஓ.பன்னீர்செல்வத்தின் மகன் ஓ.பி.ரவீந்திரநாத் பிரதமர் மோடியுடன் நடந்து சென்ற புகைப்படத்தைப் பார்க்கும்போதும், ரவீந்திரநாத்தை கட்சிசாரா மக்களவை உறுப்பினராகப் பதிவு செய்யும்படி எடப்பாடி பழனிசாமி அனுப்பிய கடிதத்துக்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பதும், ஏதோ ஒரு சமிக்ஞையை எடப்பாடி பழனிசாமி தரப்பினருக்கு பிரதமர் மோடி கொடுக்கிறார்.

அதனால்தான் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி. வேலுமணி, பி.தங்கமணி உள்ளிட்டோருக்கு நெருக்கமானவர்களின் வீடுகளில் வருமான வரித் துறை சோதனை நடைபெற்றது.மேலும் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், பி.வி. ரமணா ஆகியோர் மீதான வழக்குகளை சிபிஐ விசாரிக்கத் தொடங்கியுள்ளது என்கின்றனர் ஓ.பி.எஸ். தரப்பினர்.

### பாஜக உத்தி என்ன?

பாஜகவை பொருத்தவரை, 2024 மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் இருந்து கணிசமான மக்களவை உறுப்பினர்களைப் பெற்றாக வேண்டும் என்பதுதான் முக்கிய இலக்கு. அதற்கு வலுவான கூட்டணி தேவை.

திமுக-காங்கிரஸ் கூட்டணி 2019 மக்களவைத் தேர்தல், 2021 சட்டப்பேரவைத் தேர்தல், ஊரக உள்ளாட்சித் தேர்தல், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் என தொடர்ந்து வெற்றிப் பாதையில் இருப்பதால், அதில் இடம் பெற்றுள்ள



கட்சிகள் 2024 மக்களவைத் தேர்தலிலும் அப்படியே தொடர்வதற்கான சாத்தியக்கூறுகளே தென்படுகின்றன.

மேலும், 13 சதவீத சிறுபான்மையினர் வாக்குகள் திமுகவுக்கு உறுதியாகக் கிடைத்து வருவதால், பாஜகவுடன் நேரடியாகக் கூட்டணி வைக்க அந்தக் கட்சி விரும்பாது. அப்படி இருக்கும்போது, திமுக கூட்டணிக்கு வலுவான போட்டி கொடுத்து வெற்றி பெற வேண்டுமெனில், இரட்டைத் தலைமையிலான அதிமுக, பாமக, தேமுதிக, அமமுக உள்ளிட்ட கட்சிகளை இணைத்து 1998 மக்களவைத் தேர்தல் போன்று வலுவான அணியைக் கட்டமைக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் பாஜக மேலிடம் இருந்தது.

2019 மக்களவைத் தேர்தலில் அதிமுக கூட்டணி 33 சதவீத வாக்குகளைப் பெற்றது. இது, 2021 பேரவைத் தேர்தலில் 40 சதவீத வாக்குக ளாக உயர்ந்தது. திமுக-அதிமுக கூட்டணிகளுக்கு இடையே வாக்கு வித்தியாசம் 5.5 சதவீதம் மட்டுமே. அதே அணியைத் தொடர்ந்தால் கொங்கு மண்டலம், தென் மாவட்டங் களில் குறைந்தபட்சம் 15 தொகுதிகளையாவது கைப்பற்றி இருக்கலாம் என்பது பாஜக மேலிடத்தின் கணக்காக இருந்தது.





எடப்பாடி பழனிசாமி தரப்பிடம் 95 சதவீத கட்சி நிர்வாகிகள்இருந்தாலும், ஓ.பன்னீர்செல்வம் அனைத்து தொகுதிகளிலும் தனித்து வேட்பாளர்களை களமிறக்கினால், திமுக கூட்டணி மீண்டும் 2019 மக்களவைத் தேர்தலைப் போல 2024 தேர்தலிலும் வெற்றிக்கனியைப் பறிக்கக்கூடும். தென் மாவட்டங்களில் முக்குலத்தோர் வாக்குகள் முற்றிலுமாக அதிமுக-பாஜக அணிக்கு கிடைக்க வாய்ப்பு இல்லாமல் போகக்கூடும்.

இரட்டை இலை சின்னம் முடங்கும் நிலையில், திராவிட கருத்தியலுக்கு எதிராக தமிழ் தேசியம், ஹிந்துத்துவ கருத்தியல்கள் வலுப்பெறக் கூடும். இதன்மூலம், பலமுனைப் போட்டியால் உத்தரபிரதேசம், பிகார், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் ஜனதா தளம் உடைந்து பாஜக வலுப் பெற்றதுபோல தமிழகத்திலும் பாஜக வலுப்பெறும் என்பது அந்தக் கட்சியில் சிலரது நம்பிக்கை.

கருணாநிதி, ஜெயலலிதா என இரு பெரும் ஆளுமைகள் இல்லாத சூழலில், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் 5 சதவீத வாக்குகளை பாஜக பெற்றது. கடந்த சில மாதங்களாக வட தமிழகத்தில்கூட பாஜகவின் போராட்டங்களுக்கு தொண்டர்கள் அதிகளவில் வருவதைப் பார்க்கும்போது அந்தக் கட்சிக்கு தனிப்பட்ட முறையில் 10 சதவீத வாக்குகளுக்கு மேல் கிடைக்கலாம்.

பாமக, அமமுக, தேமுதிக மற்றும் உதிரிக் கட்சிகளுடன் பன்னீர்செல்வம் தரப்பை இணைத்துக் கொண்டு அல்லது தவிர்த்துவிட்டு தேர்தலை சந்தித்தால் கணிசமான தொகுதிகளைப் பெற முடியும் என தேர்தல் நுணுக்கங்களை நுட்பமாக ஆய்வு செய்யும் சில பாஜக தலைவர்கள் கட்சித் தலைமைக்கு தெரிவித்துள்ளனர்.

2014-இல் பாஜக, பாமக, தேமுதிக, மதிமுக, கொமதேக, ஐஜேகே உள்ளிட்ட கட்சிகள் மூன்றாவது அணியாக களம் இறங்கியபோது மும்முனைப் போட்டியில் பாஜகவின் எதிர்ப்பு வாக்குகள் சிதறியதால் கன்னியாகுமரி, தருமபுரி, புதுச்சேரி ஆகிய மூன்று மக்களவைத் தொகுதிகளில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்றது.

அதேபோல, இப்போது திமுக-காங்கிரஸ் அணி, எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அணி, பாஜக தலைமையிலான அணி, நாம் தமிழர் கட்சி என நான்குமுனைப் போட்டி அல்லது பன்னீர்செல்வத்தை கழற்றி விடும்போது அது ஐந்துமுனைப் போட்டியாக உருவெடுத்தால் கன்னியாகுமரி உள்பட சில தொகுதிகளையாவது பாஜக கூட்டணியால் பெற முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

ஒன்றுபட்ட அதிமுக, பாமக, தேமுதிக, அமமுக மற்றும் உதிரிக் கட்சிகள் என திமுக-காங்கிரஸ் கூட்டணிக்கு எதிராக ஒரே அணியைத் திரட்டுவது சாத்தியமல்ல. அப்படியே திரட்டினாலும் பாஜக எதிர்ப்பு வாக்குகள் திமுக அணியில் ஒருமுகமாக குவிந்து 2004, 2019 மக்களவைத் தேர்தல்களைப் போல முடிவு வந்துவிடக்கூடும் என்றும், பாஜக மேலிடத்தைக் கட்சி நிர்வாகிகள் சிலர் எச்சரிக்கை செய்கிறார்கள்.

இதுவரை தமிழகத்தில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல் முடிவுகளின் புள்ளிவிவரங்களை ஆய்வு செய்தால், இந்திரா காந்தி குடும்பத்தில் இருந்து ஒருவர் பிரதமர் வேட்பாளராகக் களமிறக்கப்பட்டால் அந்த அணி 50 சதவீத வாக்குகளைத் தாண்டி அதிக தொகுதிகளைக் கைப்பற்றி விடுகிறது.

2024 மக்களவைத் தேர்தலிலும் திமுக கூட்டணி பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தி முன்னிறுத்தப்பட்டால் அந்தக் கூட்டணி அதிக வாக்கு களைப் பெறலாம்.

2014 மக்களவைத் தேர்தலில் அதி முகவை தனித்து களமிறக்கி 37 தொகுதி களில் ஜெயலலிதா வெற்றி பெற்றதைப் போல, ஸ்டாலினும் காங்கிரஸை கழற்றிவிடக் கூடும் அல்லது அந்தக் கட்சிக் கான தொகுதிகள் எண்ணிக் கையை மேலும் குறைக்கக்கூடும். காங்கிரஸை திமுக கழற்றிவிட் டாலும், தொகுதி எண்ணிக்கையைக் குறைத்தாலும் பாஜகவுக்கு அரசியல் ரீதியாக லாபம் தான்.

பிரதான திராவிடக் கட்சிகளில் ஒன்றான அதிமுக இரு பிரிவுகளாக மாறிய நிலையில், பாஜகவை தமிழகத்தில் வளர்த்தெடுக்க எந்த வகை உத்தியை அந்தக் கட்சி கடைப்பிடிக்கப் போகிறது என்பது பிரதமர் மோடியின் இன்றைய சென்னை பயணத்துக்குப் பிறகு தெரிய வரும். பாஜகவின் உத்திதான் தமிழக அரசியல் சதுரங்கத்தின் அடுத்த நகர்வைத் தீர்மானிக்கும்.

# கூட்டமைப்பை உடைத்து சிதறடிக்க உள்ளேயும், வெளியேயும் முயற்சி!

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி. குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப்புலிகள் இயங்கு நிலையிலிருந்த காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் குரலாக உருவாக்கப் பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு சிதைவடைந்து மூன்று கட்சிகளுடன் இணைந்த கூட்டாகவுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்குள் உள்ள மூன்று கட்சிகளை யும் உடைத்து சிதறடிக்கும் வேலைத் திட்டங்களை சிலர் வெளியிலிருந்தும் உள்ளிரும் முன்னெடுத்துவருவதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் செய லாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன் தினம் மட்டக்களப்பில் நடை பெற்றது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரதித் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாணசபை பிரதி தவிசாளருமான பிரசன்னா இந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபையின் தவிசாளர் யோகநாதன் மற்றும் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்கள், தமிழீழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்,

இலங்கை சுதந்திரமடைந்த கால மிருந்து தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் பல கட்டங்களாக நடைபெற்றாலும் 1983ஆம் ஆண்டு ஜூலையில் நடாத்தப்பட்ட இனக் கலவரம் தமிழின சுத்திகரிப்பாகவே பார்க்கப் பட்டது. கறுப்பு ஜூலையென்று உலகளாவிய ரீதியில் பேசப்பட்ட அந்த நாட்கள் ஜூலை 23ஆம் திகதி அனுஸ்டிப்பது பிழையான விடயமாகும். 1983ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி திருநெல்வேலியில் விடு தலைப்புலிகளினால் 13இராணுவத்தினர் தான் கொல்லப்பட்டார்கள். இராணுவத்தினரின் சடலங்கள் கொழும் பினை சென்றடைந்த நிலையிலேயே ஏற்கனவே திட்டமிட்டிருந்த இன சுத்திகரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஜூலை 25ஆம் திகதியும் 27ஆம் திகதியும் தமிழ் அரசியல் கைதிகள் வெலிக்கடை சிறைக்குள்ளே இலங்கை இராணுவத்தின் அனுசரணையுடன் காடையர்கள் சிறைச்சாலைக்குள் அனுப்பப்பட்டு 25ஆம் திகதி 36அரசி யல் கைதிகளும் 27ஆம் திகதி 17 அரசியல் கைதிகள் உட்பட 53பேர் வெலிக்கடைக்குள் படுகொலைசெய்யப்பட்டார்கள்.

மே மாதமும் ஜூலை மாதமும் தமிழர்களின் வாழ்நாளில் மறக்கமுடியாத நாளாகயிருந்தது. இந்த இரு மாதங்களும் தமிழர்களை கொடுமைப்படுத்திய சிங்கள அரச தலைவர்களுக்கு தற்போது மறமுடியாத நாளாக அமைந்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் அரசாங்கங்களுக்கு தற்போது என்ன நடைபெற்று வருகின்றது என்பது அனைவருக்கும் தெரியும். இந்த நாட்டு மக்களினால் விரட்டியடிக்கப் பட்டு எந்த நாட்டிலும் தங்கமுடியாத சூழ்நிலையேற்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டில் பத்து வருடத்திற்கு மேலாக இந்த நாட்டில் ஜனாதிபதியாகயிருந்து இன்று அரசியல் அநாதையாக்கப்பட்டுள்ளார். மே மாதம் முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சத்து நாற்பதா யிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களையும் ஆயிரக் கணக்கான போராளிகளையும் கொன்றுகுவித்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக ஏப்ரல் மாதம் போராட்டங்கள் தொடங்கியது. மே மாதம் 09ஆம் திகதி பிரதமர் பதிவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ விலகவேண்டிய சூழ்நிலையேற்பட்டது.

ஜூலை மாதத்தில் இந்த நாட்டில் ஸ்திரமற்ற தன்மையேற்பட்டது. ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், பிரமதர் வாசஸ்தலம் என்பன போராட்டக்காரர்களினால் ஆக்கிரமிக்கப்பட்டன. நாடு அல்லோ லகல்லோலப்பட்டு நிற்கின்றது. தமிழர்கள் தமது நியாயமான உரிமைகளுக்காகவே அகிம்சை ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் கடந்த காலத்தில் போராடியுள்ளார்கள் என்பதை இன்றைய அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒரு பாராளுமன்ற உறுப்புரிமையுடன் வந்த ரணில் விக்கிரமசிங்க இன்று ஜனாதிபதியாகியுள்ளார். இன்று சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்காக அறைகூவல் விடுத்துள்ளார். 2015-தொடக்கம் 2019 வரையில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியிருந்தது.



இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியானது சிங்கள மக்களுக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கும் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியுள் ளது. தமிழ் மக்களுக்கு பல பிரச்னைகள் உள்ளன. தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வுத் திட்டம் வேண்டும். அதில் எந்தவித மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால் நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையொன்று ஏற்படவேண்டும் என்பது அனைவரது அபிலாசையாகும்.

இன்று பாராளுமன்றத்தில் ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களித்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்தாக கதைகள் கூறப்படுகின்றன.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாராலும் சிதைக்கப்பட முடியாமல் உடைக்க முடியாமலேயே பாராளுமன்றத்தில் செயற்பட்டு வருகின்றது. குறித்த ஜனாதிபதி தெரிவு தொடர்பில் ஒன்றுபட்ட நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பத்து பேரும் செயற்பட்டனர்.

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியானது சிங்கள மக்களுக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கும் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்களுக்கு பல பிரச்னைகள் உள்ளன. தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வுத் திட்டம் வேண்டும். அதில் எந்தவித மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால் நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையொன்று ஏற்படவேண்டும் என்பது அனைவரது அபிலாசையாகும்.

அந்தவகையில் சர்வகட்சி ஆட்சியமைப்பதற்கான அழைப்பினை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடுத்துள்ளார். தமிழ்த் தேசியத் கூட்டமைப்பு அதில் பங்கெடுக்கும் என்று நான் கருதவில்லை. சர்வகட்சி ஆட்சியொன்று அமையவேண்டும், எமது இனப்பிரச்னைக்கான தீர்வு ஒன்று அந்த சர்வகட்சி ஊடாக ஏற்பட வேண்டும்.

1957ஆம் ஆண்டு பண்டா-செல்வா ஒப்பந்தம் உருவாகும்போது புத்தி பிக்குகளுடன் இணைந்து ஜேஆர் ஜயவர்த்தன புத்த பிக்குகளுடன் இணைந்து கண்டியாத்திரை சென்று எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில் தனது அரசியல் எதிர்காலத்தினை கருத்தில்கொண்டு பண்டாரநாயக்க அந்த ஒப்பந்தததினை அமுல்படுத்தி தவறியிருந்தார். இதுபோன்று பல ஒப்பந்தங்கள் எறியப்பட்டது.

2000ஆண்டு சந்திரிகாவினால் தீர்வுத் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டபோது ரணில் விக்ரமசிங்கவினால் பாராளுமன்றத்திற்குள் அது எரிக்கப்பட்டது. இனப்பிரச்னைக்கான தீர்வொன்று கிடைக்கவேண்டுமாகயிருந்தால் எந்தவிதமான எதிர்ப்புகளும் தெற்கு அரசியல் கட்சிகளிடையே இருக்கக் கூடாது.



இந்த ஆட்சி நிலைத்திருக்குமானால் எதிர்வரும் காலத்தில் சர்வகட்சி ஆட்சியொன்று உருவாகுமாகயிருந்தால் சர்வகட்சிகள் இணைந்து பொருளாதார மீட்புக்கு மேலாக இனப்பிரச்னைக்கான தீர்வினை தருவார்களென்று எதிர்பார்க்கின்றோம். பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் 22ஆவது திருத்த சட்டத்தில் இனப்பிரச்னையும் உள் ளடக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம். தமிழ் மக்களும் இதனையே எதிர்பார்க்கின்றனர்-என்றார்.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஒரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |
| 60. | பொருத்தமான வாக்கியங்கள் | | | | |

## கல்வி tv CHANNEL-1

**29.07.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**29.07.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இனக்குரோதங்களை மறந்து தமிழர் தீர்வுக்கு சிங்கள மக்களும் குரல் கொடுக்க வேண்டும்

## இந்திரகுமார் பிரசன்னா கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை. 29

தமிழ் மக்களுடன் சிங்கள மக்களும், சிங்கள மக்களுடன் தமிழ் மக்களும் சேர்ந்து வாழ்வதென்றால் இனக் குரோதங்களை மறந்து தமிழ் மக்களுக்கு நியாய பூர்வமான தீர்வு கிடைப்பதற்காக சிங்கள மக்களும் குரல் கொடுக்க வேண்டும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பிரதித் தலைவரும், கிழக்கு மாகாணசபை முன்னாள் பிரதித் தவிசாளருமான இந்திர குமார் பிரசன்னா தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற கடந்த 1983ஆம் ஆண்டு வெலிகடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட தங்கதுரை, குட்டிமணி உள்ளிட்ட 53 பேரின் நினைவு நிகழ்வின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்கள் தமிழ் போராட்டத் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டமை தவறு என இன்று சிங்கள மக்கள் உணர்ந்திருக்கின்றார்கள். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் படுகொலை செய்யப்பட்ட எமது தலைவர்களுக்கு அஞ்சலி செலத்தப்பட்டிருந்தது. அவர்கள் நியாய பூர்வமாக தமிழ் மக்களின் விடுதலக்காக தன்னுயிரை அர்ப்பணித்த தலைவர்கள் என்பதை இன்று சிங்கள மக்கள் 39 வருடங்களின் பின்னர் புரிந்துள்ளார்கள்.

எனவே இந்த கோட்டா கோ கோம் என்னும் காலிமுகத்திடல் போராட்டத்தில் இருந்து போராடிக் கொண்டிருக்கும் இளைஞர் யுவதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், மதகுருமார்கள் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். மாறி மாறி ஆட்சி செய்திருக்கின்ற சிங்கள பேரினவாத அரசுகள் இனவாதத்தைக் கக்கி தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் பிரித்து ஆண்டதன் காரணமாகவே இவ்வாறான படுகொலைகள் இடம்பெற்றன.

இன்று சிங்கள மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்ற அநியாயங்கள், அக்கிரமங்கள், இராணுவ அடக்குமுறைகளை அனுபவித்ததன் விளைவாகவே அவர்கள் தமிழ் மக்களின் போராட்டம் பற்றிய உண்மையை உணர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

தற்போது அந்த மக்களினால் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. ஆனாலும் மக்கள் நினைத்தது நடக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ராஜபக்ஷர்களின் கைப் பொம்மையாக இன்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். இவரால் இந்த நாட்டின் பொருளாதாரப் பிரச்சனையைத் தீர்க்கமுடியும் என மக்கள் நம்பமாட்டார்கள்.

ஏனெனில் இவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் புதிய அமைச்சரவையை உருவாக்கியபோது 18 அமைச்சர்களில் 14 பேர் ராஜபக்ஷர்களின் சகாக்கள். இருந்தவர்களையே மீண்டும் அமைச்சர்களாக ஆக்கி அழகு பாாத்திருக்கின்றார். மக்கள் எவர் எவரையெல்லாம் தற்போது நிராகரித்துள்ளார்களோ அவர்களுடன் இணைந்தே அதிகாரத்திற்கு வந்துள்ளார்.

இந்த விடயங்கள் ஒருபுறம் இருந்தாலும் தமிழ் மக்கள் நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். தமிழ் மக்களின் பலமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை மேலும் பலப்படுத்தி எமது மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க வேண்டும். எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைப் பிரித்தாள்வதற்கும் சில சக்திகள் முனைகின்றன.

தமிழ்த் தேசியத்தின் பால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பினைச் சிதைப்பதற்கு ஒரு போதும் இடமளிக்கக் கூடாது. பல உயிர்த்தியாயங்களின் மத்தியில் உருவாக்கப்பட்டதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. எமது தலைவர்களின் தீர்க்கதரிசனத்தில் உருவாக்கப்பட்ட இதனைப் பிளவுபடுத்தும் எண்ணத்தோடு யார் இருந்தாலும் அவர்களுக்கு மக்கள் சரியான பாடம் புகட்ட வேண்டும்.

எமது தங்கதுரை குட்டிமணி ஆகியோரின் படுகொலையின் பின்னரே பல பல தமிழ் இயக்கங்கள் உருவாக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் விடுதலைப் போராட்டங்களுக்குச் சென்றார்கள். அந்த விடுதலை வேட்கையில் கிடைத்த ஒரு துளிதான் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் கிடைத்த வட கிழக்கு இணைப்பு. ஆனால் சிங்களப் பேரின அரசு அந்த ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தாமல் இருக்கின்றது.

எனவே இது தொடர்பில் இந்தியா உரிய கரிசனை செலுத்தி இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு மேல் சென்று வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு நியாயபூர்வமான தீர்வினைப் பெற்றுத் தர வேண்டும். இதற்கான அழுத்தங்களை இலங்கை ஆட்சியாளர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

எனவே தென்னிலங்கை மக்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழ் மக்களுடன் சிங்கள மக்களும், சிங்கள மக்களுடன் தமிழ் மக்களும் சேர்ந்து வாழ்வதென்றால் இனக் குரோதங்களை மறந்து தமிழ் மக்களுக்கு நியாயபூர்வ மான தீர்வு கிடைப்பதற்காக சிங்கள மக்களும் குரல் கொடுக்கவேண்டும்-என்றார். (அ)

# ஆலையடிவேம்பு பகுதியில் கியூ.ஆர். சிஸ்டம் வெற்றி!

## பிரதேச செயலக ஒத்துழைப்போடு எரிபொருள் விநியோகம்

மட்டக்களப்பு, ஜூலை. 29

ஆலையடிவேம்பு பல நோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் கியூ.ஆர். பரிசோதனை மற்றும் வாகன இறுதி இலக்கத்தின் அடிப்படையில் சுமூகமாகவும் நேர்த்தியான முறையிலும் பெற்றோல் வழங்கப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் உத்தியோகத்தர்களின் கியூ.ஆர். பரிசோதனை உதவியுடன் அக்கரைப்பற்று பொலிசாரின் ஒத்துழைப்போடு எரிபொருள் நிரப்பு நிலைய தலைவர் மற்றும் முகாமையாளர் உள்ளிட்ட ஊழியர்களால் பெற்றோல் விநியோகம் சீரான இடம்பெற்றது.

பெற்றோல் விநியோகம் அமைதியான ஆரம்பமான நிலையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டாலும் கூட்டுறவு சங்க ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய ஜெனரேற்றர் வசதியுடன் மக்கள் நலன் கருதி பெற்றோல் வழங்க எரிபொருள் நிரப்பு நிலைய நிருவாகம் நடவடிக்கை எடுத்தமை சிறப்பாக அமைந்தது.

எவ்வித தடைகளுமின்றி மிகவும் சீரான முறையில் 6, 7, 8, 9 வாகன இறுதி இலக்கத்தினையுடைய வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டதை காண முடிந்தது.

இதேநேரம் பெண்களுக்கும் மதகுருமாருக்கும் ஒரு வரிசை எனவும் பெற்றோல் வழங்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

(அ)

# சுகாதார பரிசோதகருக்கு கோவிட்

திருமலை, ஜூலை. 29

திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிண்ணியா சுகாதார வைத்திய பணிமனையில் கடமை யாற்றிவரும் 51 வயதுடைய பொதுச் சுகாதார பரிசோதகரே கோவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட் டிருந்தபோதே, தொற்று உறுதியாகியுள்ளது.

காய்ச்சல், அதிகளவிலான சளி காரணமாக அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை பொது வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

குறித்த பொதுச் சுகாதார பரிசோதகருக்கு மேற்கொள் ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் மூலமும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் கடமை நேர வைத்திய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தற்போது கோவிட் தொற்று மீண்டும் பரவிக் கொண்டு வருவதால் முகக் கவசங்களை அணியுமாறு பொதுமக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

# கதிர்காம உற்சவத்துக்கு விசேட பஸ் சேவைகள்

அம்பாறை, ஜூலை. 29

கதிர்காம ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டி, நேற்று வியாழக்கிழமை முதல் தினமும் காலை 08 மணிக்கு கிரமமாக கல்முனையிலிருந்து கதிர்காமத்துக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக, கல்முனை சாலை முகாமையாளர் வி. ஜௌபர் தெரிவித்தார்.

கதிர்காமத்துக்குச் செல் லும் பயணிகள் முன்கூட்டியே ஆசன பதிவை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பஸ்ஸை முன் கூட்டியே குழுவாகப் பதிவு செய்தால் தனி பஸ்ஸை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கதிர்காமத்திலிருந்து கல்முனைக்கு கிரமமான முறையில் மாலை 04 மணிக்கு பஸ் சேவைகள் ஈடுபடுத்தப் படவுள்ளதாகவும், நாளுக்கு நாள் பயணிகளின் எண்ணிக் கையைப் பொறுத்து பஸ் சேவைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

அத்துடன், உகந்தைக்கான பஸ் சேவை தினமும் காலை 07 மணி தொடக்கம் 10 மணி வரை 04 பஸ் சேவைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# திருகோணமலையில் ஹெரோய்ன் வைத்திருந்தவர் விளக்கமறியலில்

திருமலை, ஜூலை. 29

திருகோணமலை - கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவரை அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பேராறு,கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் ஹெரோய்ன் போதைப்பொருள் விற்பனை செய்து வருவதாக கந்தளாய் போதைப் பொருள் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்தேக நபர் ஆறு கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை வீட்டில் வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபரை பொலிஸார் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ)

# மரக்கறி கன்றுகள் விநியோகம்



அம்பாறை, ஜூலை. 29

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள உணவுப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில், உப உணவுப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக கலைஞர்களுக்கு மரக்கறிக் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக ஏறாவூர் நகர விவசாய விரிவாக்கல் பிரிவின் போனாசிரியை எம்.எச். முர்ஷிதா ஷிரீன் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர பிரதேசத்திலுள்ள கலையாற்றல் மிக்க பல்துறைக் கலைஞர்களுக்கு கத்தரி மற்றும் மிளகாய் கன்றுகளை வழங்கும் நிகழ்வு, ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஏறாவூர் நகர உதவிப் பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)




## தொலைக்காட்சி விவாதத்தில் மயங்கி விழுந்த தொகுப்பாளர்

லண்டன், ஜூலை. 29

இங்கிலாந்தில் பிரதமர் பதவிக்கான தொலைக்காட்சி விவாதத்தை தொகுத்து வழங்கி கொண்டிருந்தவர் திடீரென மயங்கி விழுந்ததால், சிறிது நேரம் விவாதம் தடைப்பட்டது.

பொரிஸ் ஜோன்சன் இராஜினாமா செய்துள்ள நிலையில், ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த ரிஷி சுனாக் மற்றும் லிஸ் டிரஸ் இடையே பிரதமர் பதவியை கைப்பற்ற கடும் போட்டி நிலவுகிறது.

இருவரும் ரோக் தொலைக்காட்சி விவாதத்தில் நேற்று முன் தினம் பங்கேற்றிருந்த நிலையில், அதை தொகுத்து வழங்கி கொண்டிருந்த கேட் மெக்கன் திடீரென மயங்கி விழுந்தார்.

மருத்துவர் அறிவுரைப்படி, கேட் மெக்கன் விவாதத்தை தொடர முடியாத நிலையில், இயான் காலின்ஸ் என்பவர் மூலம் விவாதம் தொடர்ந்தது.

(அ)

# கனேடிய குடியிருப்பு பள்ளி அநீதி போல் இனியும் கனடாவில் இடம்பெறக்கூடாது

## பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ கருத்து

ஒட்டாவா, ஜூலை. 29

கனேடிய குடியிருப்புப் பள்ளிகளில் பழங்குடி கனேடியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எவராலும் மறக்க முடியாது. இதுபோல் இனியும் கனடாவில் இடம்பெறக்கூடாது என்பதில் உறுதியாய் இருப்போம் என கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனடாவில் கத்தோலிக்க திருச்சபைகளால் நடத்தப்பட்ட குடியிருப்பு பள்ளிகளில் பழங்குடியின சிறுவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக பாப்பரசர் பிரான்சிஸ் மன்னிப்பு கோரினார்.

கனடாவின் எட்மண்டன் அருகே உள்ள மாஸ்க்வாசிஸ் - செவன் சோரோஸ் கத்தோலிக்க தேவாலயத்தில் கூடியிருந்த சுமார் 2000 வரையான பழங்குடி சமூகத்தினர் மத்தியில் பாப்பரசர் மன்னிப்பு கோரினார்.

இந்நிலையில் இது குறித்து கருத்து வெளியிட்ட கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ இதுபோல் இனியும் கனடாவில் இடம்பெறக்கூடாது என்பதில் உறுதியாக இருப்போம் என கருத்து வெளியிட்டுள்ளார்.



அக்காலத்தில் பல கிறிஸ்தவர்களால், பூர்வீக இனத்தவர் விடுதிப் பள்ளி மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட தீமைகளுக்காக, அப்பள்ளிகளின் முன்னாள் மாணவர்களிடம் பாப்பரசர் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

150,000த்துக்கும் மேற்பட்ட பூர்வீக இனங்களின் சிறார் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டு விடுதிப் பள்ளிகளில் வைக்கப்பட்டனர். இவர்களில் பலர், உடல், மனம், உணர்வு, மற்றும், பாலியல் ரீதியில் கடும் உரிமை மீறல்களை எதிர்கொண்டனர். இத்தகைய வேதனைக்குரிய பள்ளி அமைப்பின் மரபு இன்றும் இருக்கின்றது. தற்போது கத்தோலிக்கத் திருஅவையில் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வினத்தவரின் மனக்காயங்களைக் குணப்படுத்தி, அவர்களோடு ஒப்புரவாகும் நடவடிக்கைக்கு கனடா அரசு தொடர்ந்து ஆதரவளிக்கும் என கனேடிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

இன்னும், உண்மை மற்றும் ஒப்புரவுப் பணிக்குழுவின் திட்டத்தை அரசு முழுமையாகச் செயற்படுத்தும். ஒப்புரவு ஏற்படுத்துவது, கனடாவின் அனைத்து மக்களின் பொறுப்பாக உள்ளது.

கடந்த காலத்தில் மாணவர் விடுதிப் பள்ளிகளில் நடந்ததை எவராலும் மறக்க முடியாது. இதுபோல் இனியும் கனடாவில் இடம்பெறக் கூடாது என்பதில் உறுதியாய் இருப்போம். பூர்வீக இனத்தவர் மற்றும், கனடா நாட்டினர் அனைவருக்கும், ஒப்புரவு மற்றும், குணப்படுத்தல் உணர்வில், சிறந்ததொரு வருங்காலத்தை ஒன்றிணைந்து உருவாக்குவோம் எனவும் கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

(அ)

# பிலிப்பைன்ஸை உலுக்கிய நிலநடுக்கம் ஐவர் பலி! 100க்கும் அதிகமானோர் காயம்!!

மணிலா, ஜூலை. 29

பிலிப்பைன்ஸை உலுக்கிய பயங்கர நிலநடுக்கத்தின் பாதிப்புகளால் 5 பேர் பலியாகினர். 100-க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸின் வடக்கு பகுதியில் உள்ள அப்ரா மாகாணத்தை மையத்தில் இந்த நிலநடுக்கத்தின் மையப் பகுதி அமைந்திருந்தது.

ரிச்டர் அளவுகோலில் 7.1 புள்ளிகளாக பதிவான நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 25 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக பிலிப்பைன்ஸ் எரிமலை மற்றும் நில அதிர்வு ஆய்வு நிறுவனம் தெரிவித்தது.

உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் காலை 8:43 மணிக்கு ஏற்பட்ட நிலநடுக்கம் சில வினாடிகளுக்கு நீடித்தது. அப்போது அப்ரா மாகாணத்தில் உள்ள வீடுகள், கடைகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. இதனால் பீதியடைந்த மக்கள் அலறியடித்துக் கொண்டு கட்டடங்களை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.



இந்த நிலநடுக்கம் அப்ரா மாகாணத்தில் பல இடங்களில் நிலச்சரிவை ஏற்படுத்தியது. நிலநடுக்கம் மற்றும் நிலச்சரிவால் அந்த மாகாணத்தில் வீடுகள், கடைகள், தேவாலயங்கள் உள்ளிட்ட பல கட்டடங்கள் இடிந்து சேதமடைந்தன.

இந்த நிலநடுக்கமானது அண்டை மாகாணமான பெங்குவெட், தலைநகர் மணிலா உள்ளிட்ட பல இடங்களிலும் உணரப்பட்டது.

இதனிடையே நிலநடுக்கத்தால் இதுவரை 5 பேர் பலியானதாகவும், 100இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். படுகாயம் அடைந்த அனைவரும் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். படுகாயம் அடைந்தவர்கள் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கும் நிலையில், இடிபாடுகளில் இன்னும் பலர் சிக்கியிருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

இதேவேளை, மேலும் நிலநடுக்கம் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக பெருமளவு மக்கள் வீடுகளுக்கு செல்ல அஞ்சி தொடர்ந்து வீதிகளிலும், தற்காலிக முகாம்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ், பசிபிக் நெருப்பு வளையம் என்று அழைக்கப்படும் புவித்தட்டுகள் அடிக்கடி நகருகிற இடத்தில் அமைந்துள்ளது. இதனால் அந்த நாட்டில் பயங்கர நிலநடுக்கம், புயல், எரிமலை வெடிப்பு போன்ற இயற்கை பேரழிவுகள் அடிக்கடி நிகழ்கின்றன.

முன்னதாக கடந்த 1990ம் ஆண்டு வடக்கு பிலிப்பைன்சில் ரிக்டர் அளவுகோலில் 7.7 புள்ளிகள் அளவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் சுமார் 2,000 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## ஒரு நூற்றாண்டுக்கு முன் இருந்ததை விட கடல் மட்டம் மிக வேகமாக உயர்ந்துள்ளது

லண்டன், ஜூலை. 29



ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இருந்ததை விட கடல் மட்டம் மிக வேகமாக உயர்ந்து வருகின்றது என பிரித்தானியாவின் காலநிலை மற்றும் வானிலை குறித்த வானிலை அலுவலகத்தின் வருடாந்திர அறிக்கை தெரிவிக்கின்றது.

அதேவேளை, வசந்த காலம் முன்னதாகவே வரப்போகிறது என்றும், காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் விரைவாக வளர்ச்சியடையவில்லை என்றும் பாதுகாவலர்கள் எச்சரிக்கின்றனர்.

காலநிலை மாற்றம் பிரித்தானியாவை பாதிக்கும் வழிகளை அறிக்கை மீண்டும் எடுத்துக் காட்டுகிறது.

வானிலை அலுவலகம், 2021ஆம் ஆண்டிற்கான காலநிலை மற்றும் வானிலை நிகழ்வுகளை மதிப்பிட்டது, இதில் புயல் அர்வென் போன்ற அழிவுகரமான வெள்ளத்தை ஏற்படுத்தியது.

1990ஆம் ஆண்டு முதல் கடல் மட்டம் சுமார் 16.5 செ.மீ உயர்ந்துள்ளது. ஆனால் உயரும் வீதம் அதிகரித்து வருவதாக வானிலை மையம் கூறுகிறது.

அவை இப்போது ஆண்டுக்கு 3-5.2 மி.மீ. அதிகரித்து வருகின்றது. இது கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்த அதிகரிப்பு வீதத்தை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.

இது கடற்கரையின் பல பகுதிகளை சக்திவாய்ந்த புயல் மற்றும் காற்றுக்கு வெளிப்படுத்துகிறது, சுற்றுச்சூழலையும் வீடுகளையும் சேதப்படுத்துகிறது. சுமார் 500,000 வீடுகள் வெள்ளத்தால் ஆபத்தில் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

(அ)

# அணுஆயுத தடுப்பை அணிதிரட்ட வடகொரியா தயாராகவே உள்ளது

## கிம் ஜோங் உன் அறிவிப்பு

பியொங்யாங், ஜூலை. 29

நாட்டின் அணுசக்தி போர் தடுப்பு அதன் முழுமையான பலத்தை உண்மையாகவும் துல்லியமாகவும் உடனடியாகவும் அதன் பணிக்கு அணி திரட்ட முழுமையாக தயாராக உள்ளது என வட கொரிய தலைவர் கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.

வட கொரியாவில் 'வெற்றி நாள்' என்று அழைக்கப்படும் கொரியப் போரில் சண்டையை முடித்த போர் நிறுத்தத்தைக் குறிக்கும் உரையில், கிம் ஜோங் உன் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

மேலும், அமெரிக்காவின் அச்சுறுத்தலுக்குவட கொரியா தனது பாதுகாப்பைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றும் கூறினார். எந்தவொரு நெருக்கடிக்கும் பதில ளிக்க தங்கள் ஆயுதப்படைகள் முழுமையாக தயாராக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

தென்கொரியா மற்றும் அமெரிக்காவில் உள்ள அதிகாரிகள் வட கொரியா 2017ஆம் ஆண்டுக்குப் பிறகு தனது முதல் அணுசக்தி சோதனையை நடத்துவதற்கான தயாரிப்புகளை முடித்து விட்டதாக கூறியதை அடுத்து இந்த செய்தி வெளிவந்துள்ளது.

வட கொரியா சோதனையை முன்னெடுத்தால், அதன் சைபர் தாக்குதல் திறன்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நடவடிக்கைகள் உட்பட வலுவான பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று தென் கொரியாவின் வெளியுறவு அமைச்சர் கடந்த புதன்கிழமை தெரிவித்தார்.

கிம் தனது உரையில், போருக்குப் பிறகு சுமார் 70 ஆண்டுகளுக்குப் பிறகு தனது நாட்டிற்கு எதிராக தென்கொரியாவுடன் ஆபத்தான, சட்ட விரோத விரோதச் செயல்களை அமெரிக்கா தொடர்கிறது எனவும் அதை பேய்த்தனமாக காட்டி அதன் நடத்தையை நியாயப்படுத்த முயல்கிறது எனவும் கூறினார்.

## பாகிஸ்தானுடனான டெஸ்ட்:

# பிரபாத், ரமேஷ் அசத்தல் இலங்கை அபார வெற்றி!



காலி, ஜுலை 29

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 246 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

காலியில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதல் இனிங்ஸில் இலங்கை அணி சகல விக்கெட் களையும் இழந்து 378 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அணிக்காக, தினேஸ் சந்திமால் அதிகபட்சமாக 80 ஓட்டங்களையும் நிரோஷன் திக் வெல்ல 51 ஓட்டங்களையும் மற் றும் ஓஸத பெர்னான்டோ 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்ட னர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் நஷீம் ஷா மற்றும் யாசிர் ஷா ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தியிருந்தனர்.

பதிலுக்கு தமது முதல் இனிங்ஸை விளையாடிய பாகிஸ் தான் அணி சகல விக்கெட்களையும் இழந்து 231 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. இதில் அகாஷ் சல்மான் அதிகபட்சமாக 62 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் ரமேஷ் மெண்டிஸ் 5 விக் கெட்களையும், பிரபாத் ஜயசூரிய 3 விக் கெட்களையும் வீழ்த்தியிருந்தனர்.

முதல் இன்னிங்ஸ் நிறைவில் இலங்கை அணி 147 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்தது. பதிலுக்கு தமது இரண்டாவது இனிங்ஸை விளையாடிய இலங்கை அணி 8 விக்கெட்களை இழந்து 360 ஓட் டங்கள் பெற்றுக்கொண்டிருந்த நிலையில் போட்டியை இடை நிறுத்தியது.

இலங்கை அணி சார்பில் உப தலைவர் தனஞ்சய டி சில்வா 109 ஓட்டங்களையும், அணித்தலைவர் திமுத் கருணரத்ன 61 ஓட்டங்களை யும் பெற்றுக் கொண்டிருந்தனர்.

இதனடிப்படையில் பாகிஸ்தான் அணிக்கு 508 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பதிலுக்கு வெற்றி இலக்கை நோக்கி தமது இரண்டாவது இனிங்ஸை விளையாடிய பாகிஸ்தான் அணி சகல விக் கெட்களையும் இழந்து 261 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணித்தலைவர் பாபர் அசாம் அதிகபட்சமாக 81 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் பிரபாத் ஜயசூரிய 5 விக்கெட்களையும் ரமேஷ் மெண்டிஸ் 4 விக்கெட்களையும் வீழ்த்தியிருந்தனர்.

அதனடிப்படையில் 246 ஓட் டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது.

2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1 - 1 ரீதியில் போட்டி சமநிலையில் முடிவடைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




# ஆசியக் கிண்ண தொடர் எமிரேட்ஸுக்கு மாற்றம்!

## ஆசிய கிரிக்கெட் சபை அறிவிப்பு

டுபாய், ஜுலை 29

இந்த ஆண்டுக்கான ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடர் இந்த ஆண்டு இருபது -20 வடிவத்தில் நடக்கவுள்ளது. ஒகஸ்ட் 27 முதல் செப்ரெம்பர் 11 வரை இலங்கையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இலங்கையில் நிலவும் அரசியல் குழப்பம் காரணமாக தொடரை வேறு இடத்தில் நடத்தப்படலாம் என்று சொல்லப்பட்டது. தற்போது தொடர் நடைபெறும் இடம் தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதன்படி, ஐக்கிய அரபு எமிரேட்ஸில் ஆசிய கோப்பைத் தொடரை நடத்துவது என ஆசிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. நேற்று நடந்த ஆசிய கிரிக்கெட் சபைக் கூட்டத்தில் விரிவான ஆலோசனைக்குப் பிறகு இலங்கையில் நிலவும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, தொடரை ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு மாற்றுவது என்று ஒருமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாகவே இந்தத் தொடர் எமிரேட்ஸுக்கு மாற்றப்பட்டுள்ளது. எனினும், தொடரை அந்த நாட்டு கிரிக்கெட் சபையுடன் இணைந்து இலங்கை கிரிக்கெட் சபையும் வழிநடத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தென்னாபிரிக்காவை வீழ்த்தியது இங்கிலாந்து

லண்டன், ஜுலை 29

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதல் இருபது - 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், நாணயச்சுழற்சியில் வென்ற தென்னா பிரிக்கா அணி பந்து வீச்சை தெரிவு செய்தது. அதன் படி, இங்கிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர்க ளாக ரோய் - பட்லர் களமிறங்கினர்.

ஜசன் ரோய் 8இ பட்லர் 22 ஓட்டங்களில் லுங்கி நிகிடி பந்து வீச்சில் வெளியேறினார். அடுத்ததாக டேவிட் மலான் - பெயர்ஸ்ரோ இணை அதிரடியாக விளையாடி ஓட்டங்களை சேர்த்தனர்.

23 பந்தில் 43 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மலான் விக்கெட்டை பறிகொடுத்தார். அடுத்த வந்த மொயீன் அலி தொடக்க முதலே அதிரடியாக விளையாடினார்.

அவர் 16 பந்தில் அரைச்சதம் அடித்து அசத்தினார். இதில் 6 சிக்ஸர்கள் அடங்கும். 52 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மொயீன் அலியும் 90 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பெயர்ஸ்ரோவும் லுங்கி நிகிடி பந்தில் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் இங்கிலாந்து அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட்களை இழந்து 234 ஓட்டங்கள் எடுத்தது. தென்னாபிரிக்கா தரப்பில் லுங்கி நிகிடி 5 விக்கெட்களை கைப்பற்றினார். 235 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் தென்னாபிரிக்கா ஆடியது. 7 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 2 விக்கெட்டுகளை பறிகொடுத்தது. டி கொக் 2, ரிலீ ரோசோவ் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஹென்ட்ரிக்ஸ் 57 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த அணித்தலைவர் மில்லர் 8, கிலாசன் 20 என விக்கெட்களை பறிகொடுத்த நிலையில் தென்னாபிரிக்கா வெற்றிக்காக டிரிஸ்டன் ஸ்டப்ஸ் போராடினார். அவர் 28 பந்தில் 72 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதில் 8 சிக்ஸர்கள் அடங்கும்.

இறுதியில் தென்னாபிரிக்கா அணி 20 ஓவரில் 8 விக்கெட்களை இழந்து 193 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் 1-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி முன்னிலையில் உள்ளது. (ஐ)

# மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் மேற்கிந்தியாவை வீழ்த்திய இந்தியா!

போர்ட் ஒவ் ஸ்பெயின், ஜுலை 29

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இந்திய அணி 3 - 0 என்ற கணக்கில் கிண்ணத்தை வென்றுள்ளது.

ஷிகர் தவான் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் முதல் போட்டியில் 3 ஓட்டங்கள் வித்தியாசத்திலும்இ 2ஆவது போட்டியில் 2 விக்கெட்கள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரை 2-0 என்ற கணக்கில் தன்வசப்படுத்தியது.

இந்நிலையில் 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி போர்ட் ஒவ் ஸ்பெயினில் நேற்று முன்தினம் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்து களம்கண்டது.

தவான், ஷுப்மன் கில் கூட்டணி சிறப்பான ஆரம்ப இணைப்பாட்டத்தைக் கொடுத்தது. 22ஆவது ஓவர் வரை இந்தக் கூட்டணி நீடித்தது. இருவருமே அரைச்சதம் கடந்த நிலையில் முதல் விக்கெட்டாக தவான் 58 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஷ்ரேயாஸ் ஐயரும் கில் உடன் இணைந்து கூட்டணி அமைத்தார். ஷ்ரேயாஸ் அதிரடியாகவும் விளையாட அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது. 34 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்த அவர்இ ஆட்டமிழக்க அடுத்த வந்த சூர்யகுமார் யாதவ் நிலைக்க தவறினார். யாதவ் 8 ஓட்டங்களில் நடையைக் கட்டினார்.

எனினும், மறுமுனையில் இருந்த ஷுப்மன் கில் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 98 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 98 ஓட்டங்களைத் தொட்டபோது மழை குறுக்கிட ஆட்டம் நிறுத்தப்பட்டது.

நீண்ட நேரம் மழை பெய்ய டக்வேர்த் - லூயிஸ் முறைப்படி இந்திய அணியின் இனிங்ஸ் 36 ஓவர்களிலேயே முடித்துக்கொள்ளப்பட்டது. இதனால் கில் சதம் அடிக்கும் வாய்ப்பு நழுவியது. 36 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 225 ஓட்டங்கள் இந்திய அணி எடுத்திருந்தாலும்இ டக்வேர்த் - லூயிஸ் முறைப்படி




அதே 36 ஓவர்களில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 256 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

ஆறுதல் வெற்றியை நோக்கி களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் வீரர்களுக்கு இனிங்ஸின் இரண்டாவது ஓவரிலேயே அதிர்ச்சி கொடுத்தார் இந்திய பந்துவீச்சாளர் முகமது சிராஜ். முதல் பந்தில் கைல் மேயர்ஸ் மூன்றாவது பந்தில் ஷமர் ப்ரூக்ஸ் என இருவரை பூச்சியத்தில் சிராஜ் ஆட்டமிழக்க செய்ய, மேற்கிந்தியத் தீவுகள் அணி நிலைகுலைந்தது. சாய் ஹோப் மற்றும் பிரண்டன் கிங் இருவரும் நம்பிக்கை கொடுத்தாலும், விரைவாகவே இவர்களையும் இந்திய வீரர்கள் ஆட்டமிழக்க செய்தனர்.

இதையடுத்து சீரான இடைவெளியில் விக்கெட்கள் விழ, கடைசி நேரத்தில் டெயிலண்டர்கள் விக்கெட்டை சஹால் சீக்கிரமாகவே வீழ்த்தினார். இதனால், 26 ஓவர்களில் 137 ஓட்டங்கள் எடுப்பதற்குள்ளாகவே அனைத்து விக்கெட்களையும் பறிகொடுத்து தோல்வி அடைந்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி. அந்த அணி தரப்பில் தலைவர் பூரண் மற்றும் பிரண்டன் கிங் இருவரும் தலா 42 ஓட்டங்கள் எடுத்தனர். இந்திய தரப்பில் சஹால் அதிகபட்சமாக 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி 3 - 0 என்ற கணக்கில் வென்று மேற்கிந்தியத்தீவுகள் அணியை வெள்ளையடிப்பு செய்தது. (ஐ)

# தேவை ஏற்பட்டால் நாம் எதிரணியில் அமர்வோம்

## டலஸ், பீரிஸ் தரப்பினர் எச்சரிக்கை





கொழும்பு, ஜூலை. 29

**தேவை ஏற்பட்டால் பாராளு மன்றத்தில் எதிர்க்கட்சியுடன் அமரப் போவதாக முன்னாள் அமைச்சர்களான டலஸ் அழகப்பெரும மற்றும் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளு மன்ற உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர்.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கூட்டு ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினர்.

இதன்போது அவர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எடுத்த அண்மைய சில தீர்மானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

டிலான் பெரேரா, நாலக கொடஹேவா, சன்ன ஜயசுமன உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

30க்கும் மேற்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் அவசரக்கால சட்ட வாக்கெடுப்பின்போது பாராளுமன்றத்தில் இருக்கவில்லை என அழகப்பெரும தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோரின் ஆதரவு தனது குழுவுக்கு இருப்பதாக அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ், தாம் பதவியில் இருந்து விலகவில்லை எனவும் தெரிவித்தார். (அ)

# சிறுவர்களிடையே பரவும் ஒருவித வைரஸ் காய்ச்சல்

கொழும்பு, ஜூலை. 29

இலங்கையில் தற்போது சிறுவர்களிடையே ஒருவித வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பெற்றோர் அவதானமாக இருக்கவேண்டும் என்று கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்திய சாலையின் விசேட மருத்துவ நிபுணர் வைத்தியர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கு அடிக்கடி அல்லது தொடர்ச்சியாக காய்ச்சல் நிலைமை இருக்குமாயின் மருத்துவரை நாடுமாறு விசேட மருத்துவ நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை -

டெங்கு மற்றும் கோவிட் தொற்று அச்சுறுத்தல் நிலவுவதாகவும் இது குறித்தும் பெற்றோர் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் பிள்ளைகளுக்கு காய்ச்சல், இருமல் மற்றும் தடிமன் உள்ளிட்ட அறிகுறிகள் இருக்குமாயின் அவர்களை பாடசாலைகளுக்கு அனுப்புவதை தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதார துறையினர் பெற்றோரை கேட்டுள்ளனர்.

# ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்களாக மத்தும பண்டார,ஷேனுகா செனவிரத்ன

கொழும்பு, ஜூலை. 29

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்களாக பேராசிரியர் சுனந்த மத்தும பண்டார மற்றும் திருமதி க்ஷேனுகா செனவிரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் திரு.சமன் ஏக்கநாயக்கவினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக (ஊடகங்கள்) பேராசிரியர் மத்தும பண்டாரவும், சர்வதேச ஊடகங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக திருமதி செனவிரத்னவும் தமது கடமைகளை பொறுப்பேற்றனர். (அ)

# இஸ்மத் மௌலவி கைது!

கொழும்பு, ஜூலை. 29

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் இஸ்மத் மௌலவி நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் தலைமையகத்துக்கு முன்னால் போராட்டம் நடத்தியமை, பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளார். (அ)

# ஜனாதிபதி மாளிகைச் சொத்துக்களை சேதமாக்கிய ஐவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜூலை. 29

கொழும்பு-கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி கடந்த ஒன்பதாம் திகதி நுழைந்து அதன் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பில் மேலும் 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதில் ஜனாதிபதி மாளிகையில் மின் உபகரணங்களை திருடிய ஒருவரும் அடங்குவதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் கொழும்பு-13 பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# போதைப்பொருளுக்காக தங்கையை விற்ற அக்கா

கொழும்பு, ஜூலை. 29

1 கிராம் போதைப்பொருளுக்கும் பதினைந்தாயிரம் ரூபாவுக்கும்தன்னுடைய 15 வயது சகோதரியை ஹெரோயின் கடத்தல்காரருக்கு விற்ற சகோதரி கைது செய்யப்பட்டதாக மினுவாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பணம் மற்றும் ஹெரோயின் கொடுத்து சிறுமியை வாங்கிய ஹெரோயின் கடத்தல்காரரும் 5120 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.


குறித்த சகோதரி 26 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய் என்றும் இவர் போதைக்கு அடிமையானவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹெரோயின் கடத்திய குற்றச்சாட்டில் சிறுமியின் தாய் சிறையில் உள்ளார். சிறுமியின் தாய் சிறைச்சாலைக்கு சென்ற பின்னர் குறித்த சகோதரியே சிறுமியை பராமரித்து வந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேற்கு நில்பனாகொட பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபரின் வீடு சோதனையிடப்பட்டு 5120 மில்லி கிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். இதன்போது சந்தேக நபரின் வீட்டில் இருந்த சிறுமி யார் என்று பொலிஸ் அதிகாரிகள் கேட்ட போதே சிறுமி விற்கப்பட்ட விடயம் வெளிச்சத்துக்கு வந்தது .

சந்தேக நபரின் தாயார் இந்தச் சிறுமி குறித்த தகவலை சம்பவத்தை வெளிப்படுத்திய தையடுத்து, சிறுமியை மீட்டது டன், சிறுமியை விற்றதாகக் கூறப்படும் சகோதரியும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் ஆடி அமாவாசை சிறப்பு பூசை!



மன்னார், ஜூலை. 29

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் ஆடி அமாவாசை சிறப்பு பூஜையானது திருக்கேதீஸ்வரம் ஆலய பிரதம சிவாச்சாரியார் கண்ணன் குருக்கள் தலைமையில் நேற்று முன் தினம் இடம் பெற்றது .

மரித்த முன்னோர்களுக்கான பிதிர்க்கடன் பாலாவி தீர்த்தக் கரையில் தர்ப்பணம் செய்யப்பட்டது.

இதன்போது ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தங்களுடைய முன்னோருக்கான பிதிர்க்கடன்களை நிறைவு செய்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## காலிமுகத்திடலு...

டலுக்கு அப்பால்' பிரகடனத்தில் சேர்க்கப்பட்டுள்ள சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டு, தமது எதிர்ப்பின் அடுத்த கட்டத்திற்கு 'அரகலய 4.0' என பெயரிட்டுள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், "இலங்கையின் ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதி நந்தசேன கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான திறமையற்ற ஆட்சிக்கு பதிலளிக்கும் வகையில் 2022 மார்ச் 1ஆம் திகதி கொஹுவல சந்தியில் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டத்தை கறுப்புத் தொப்பி இயக்கம் ஆரம்பித்தது.

சமூக-பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக மாறுவதை நாங்கள் அவதானித்ததால், கோட்டா கோ ஹோம் சமூக ஊடகப் பிரசாரத்தின் அடிப்படையில் வன்முறையற்ற மக்கள் போராட்டத்தை முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்டோம்.

இவ்வாறானதோர் அமைதியான நுண் எதிர்ப்புப் போராட்டம் கொஹுவளையில் இருந்து ஆரம்பித்து கொழும்பின் ஏனைய பகுதிகளுக்கும் புறநகர பகுதிகளுக்கும் விரிவடைந்தது. நிலவும் நெருக்கடிகளால் மக்கள் தொடர்ந்து சுமைக்கு ஆளாகியுள்ள நிலையில், நாடு முழுவதும் நடைபெற்ற நுண்ணிய போராட்டங்கள் மூலம் கோட்டா கோ ஹோம் முழக்கம் உண்மையாக்கப்பட்டது.

இந்த அகிம்சை எதிர்ப்பு மாதிரியானது, மே 9 க்குப் பிறகு தொடங்கிய 'சமையலறை புலம்பல்' என்ற தொடர் போராட்டத்தின் மூலம் நடுத்தர வர்க்கப் பிரிவுகளில் பெண்களை ஈர்ப்பதில் வெற்றி பெற்றது.

கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி காலி முகத்திடலில் நடைபெற்ற போராட்டம், அகிம்சை வழியிலான போராட்டத்தின் மூலம் மக்கள் எவ்வாறு தமது கோரிக்கைகளை நிறைவேற்ற முடியும் என்பதை உலகிற்கு நிரூபித்தது.

'வீட்டுக்கு செல்லுங்கள்' பிரசாரத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரை பதவி நீக்கம் செய்வதில் எமது தலைமுறையினர் அடையாளபூர்வமாக வெற்றி பெற்றுள்ளனர். அந்தவகையில் 'கோட்டா வீட்டுக்குப் போ' என்ற கோஷம் யதார்த்தமாகிவிட்டது.

அடுத்த கட்டமாக, 'கோட்டா வீட்டுக்குப் போ' பிரசாரத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட நிறைவேற்றப்படாத கோரிக்கைகளை நிறைவேற்றுவது மற்றும் இந்த எதிர்ப்புக்கு இந்த சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு ஒரு புதிய கட்டம் தேவைப்படுகிறது.

கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி முதல் மே 12ஆம் திகதி வரை காலி முகத்திடலில் நடைபெற்ற போராட்ட களத்தில் பல்வேறு தரப்பினருடனான கலந்துரையாடலின் பின்னர் உருவாக்கப்பட்ட 'காலி முகத்திடலுக்கு அப்பால்' பிரகடனத்தில் இந்தக் கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த சீர்திருத்தங்களை கொண்டு வருவதையே இதன் மூலம் எங்களது எதிர்ப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும் இந்த நோக்கத்தை அடைய சிவில் சமூகம் மற்றும் அரசியல் இயக்கங்களுடன் கைகோக்க நாங்கள் எதிர்நோக்குகிறோம்.

இதன் மூலம் இந்த கட்டத்தை 'அரகலய 4.0' என்று பெயரிடுகிறோம். காலி முகத்திடல் போராட்டத் தளத்தின் முதன்மையான நோக்கம் நிறைவேறியுள்ள நிலையில், அதனைத் தொடர்ந்து ஆக்கிரமிப்பதற்கு எவ்வித காரணமும் இல்லை என நாங்கள் நம்புகிறோம். இவ்வாறான போராட்டம் பரந்த சமூக அரசியல் வெளியில் விரிவடைந்துள்ளதுடன், காலி முகத்திடலுக்கான எமது பங்களிப்பை இன்றிலிருந்து முடித்துக் கொள்கின்றோம் -என்றுள்ளது. (ஐ)

## இந்திய நலனை...

கள் எச்சரித்துள்ள நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தி தொடர்பாளர் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதேசமயம், சீனாவின் கப்பல் அம்பாந்தோட்டைக்கு வருவதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் வாய்மொழியாக இந்திய அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

## கோட்டாபய...

செயலாளர் கே. ஆர். பத்மப்பிரிய இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ, அரசியலமைப்பின் 33ஆவது உறுப்புரைக்கு அமைவாக ஜனாதிபதிக்கு உண்டான அதிகாரத்தின் படி, 2020 மார்ச் 31ஆம் திகதி, 2169/2 ஆம் இலக்க அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தல் மூலம் இலங்கையில் கல்வி நடவடிக்கைகள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைத்தார்.

ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர் கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியில் மேற்கொள்ளப்பட வேண்டிய விரிவாக்கல் நடவடிக்கைகள் மற்றும் கல்வியை நவீனமயப்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளை ஜனாதிபதிக்கு வழங்குவதும், காலத்துக்குக்காலம் கல்வி முன்னேற்றம் பற்றி அறிக்கைகளை வழங்குவதும் இந்த ஆணைக்குழுவின் முதன்மை செயல்பாடுகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன.

நாட்டின் மூத்த துறைசார் வல்லுநர்கள், கல்வியியலாளர்கள், அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பணிப்பாளர்கள் உள்பட 31 பேர் ஆரம்ப உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து இந்த ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளதாக புதன்கிழமை 27ஆம் திகதி முதல் முதல் (நேற்று முன்தினம்) என்று கல்வி நடவடிக்கைகள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் குறப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஆட்சி மாற்றத்தின் பின், முன்னாள் ஜனாதிபதியால் நியமனம் வழங்கப்பட்ட கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் மற்றும் ஆணைக்குழுக்களின் உயர் பதவிகளிலும் பல மாற்றங்கள் ஏற்படவுள்ளன என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## அரசாங்கம்...

வோம் என்று அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

அத்துடன், போராட்டம் மேற்கொள்ள கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இடம் ஒதுக்கித் தருவதாக அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். நாங்கள் அதற்குத் தயார் இல்லை. தற்போது நாங்கள் போராட்டம் நடத்தும் இடத்தில் பொதுமக்களுக்கு எந்த இடையூறும் இல்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட அரசாங்கம் பதவி விலகும்வரை போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போம். அத்துடன், போராட்டம் ஒன்றை எந்த இடத்தில் முன்னெடுக்க வேண்டும் என யாருக்கும் தெரிவிக்க முடியாது. அதனால், எமது தீர்மானத்தில் நாங்கள் மாறப்போவதில்லை. இந்தத் திருட்டுக் கும்பலை வீட்டுக்கு அனுப்பும்வரை நாங்கள் போராட்டத்தை தொடர்வோம்.

நாட்டில் எரிபொருள் பிரச்னை, எரிவாயு பிரச்னை உட்பட நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார பிரச்னைகளுக்கு தீர்வு வழங்காமல் அரசாங்கம் மக்களை அடக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. எனவே, அரசாங்கம் எமது போராட்டத்தை அடக்குவதற்கு பதிலாக மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்னைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.- என்றார். (ஐ-சி)

# இரு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய மூவர் கைது!

கிளிநொச்சி, ஜுலை. 29

இருவேறு குற்றச்செயல்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில பகுதிகளில் சைக்கிள்களை திருடிய சந்தேகத்தில் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அதே பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவரும் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஐந்து சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபரிடமிருந்து 72 லீற்றர் கசிப்பும், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

சந்தேக நபர்கள் மூவரும் இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (அ)

## போராட்ட...

போராட்டத்தில் மறைந்து பெரும் குற்றச்செயல்களை செய்தவர்களை கண்டறிந்து கைது செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதனை யாரும் எதிர்க்கவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நேற்று நீதி அமைச்சின் அலுவகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறிய அவர், "நாட்டின் பொருளாதாரம் இதற்கு முன்னரும் இரு சந்தர்ப்பங்களில் சீரழிக்கப்பட்டன. பிரபாகரனை விட தெற்கு பயங்கரவாதம் பெரும் அழிவை ஏற்படுத்தியது", என்றும் தெரிவித்தார்.

மேலும்,

மக்கள் ஆணைமூலம் அதிகாரத்துக்கு வரமுடியாத மறைமுக அரசியல் சக்திகள் போராட்டத்துக்குள் மறைந்திருக்கின்றன. இது பயங்கரமான நிலைமையாகும். போராட்டத்துக்குள் பயங்கரவாதிகளும் நுழைந்திருக்கின்றனர். உண்மையான போராட்டக்கார்களின் தலைவர்களுடன் நான் கலந்துரையாடி இருக்கின்றேன். அவர்களுடன் இணக்கப்பாட்டுக்கு நாங்கள் வந்தோம். அவர்களின் கோரிக்கையாக இருந்தது முன்னாள் ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என்பதாகும். அதுவரைக்கும் அவர்களின் போராட்டம் வெற்றிபெற்றது.

போராட்டம் மூலம் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை பதவி விலகியது அதன் பின்னர் அரசமைப்பின் பிரகாரமே செயல்படவேண்டும். அதற்கு ஏற்றவகையில் அவர்களின் போராட்டம் மாற்றமடைய வேண்டும். இதற்கு அப்பாலும் அவர்கள் யாரும் வேண்டாம் என்றால் இதனை பொறுப்பேற்பது யார்? அவ்வாறு இல்லாவிட்டால் அவர்கள் யாரையாவது ஜனாதிபதியாகப் பெயரிடவேண்டும். அவ்வாறு இல்லாமல் போராட்டத்தை மேற்கொள்வதாக இருந்தால், அது நாட்டில் ஸ்திரத்தன்மையை இல்லாமலாக்கி பொருளாதாரத்தை சீரழிக்கும் செயலாகும்.

இதற்கு முன்னரும் இரண்டு சந்தர்ப்பங்களில் நாட்டின் பொருளாதாரம் சீரழிக்கப்பட்டன. பிரபாகரனைவிட தெற்கு பயங்கரவாதம் பெரும் அழிவை ஏற்படுத்தியது. 400பஸ்கள் எரிக்கப்பட்டன, ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின் மாற்றிகளை அழித்தார்கள். 40இற்கும் மேற்பட்ட தேயிலை தொழிற்சாலைகளுக்கு தீ வைத்தார்கள். 12ஆயிரத்துக்கும் அதிகமான இராணுவம் மற்றும் பொலிஸாரை கொலை செய்தார்கள். இவ்வாறானதொரு நிலைக்கு நாட்டை மீண்டும் கொண்டு செல்லவே முயற்சிப்பதாக எமக்கு விளங்குகிறது. இதற்கு நாட்டு மக்கள் இடமளிக்கக்கூடாது.

போராட்டத்தில் மறைந்து பெரும் குற்றச்செயல்களை மேற்கொண்டவர்களையே கண்டறிந்து கைதுசெய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதனை யாரும் எதிர்க்கவில்லை. போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் எவருக்கும் எந்தவித நெருக்கடியையோ அவர்களை கைதுசெய்யவோ கூடாது என பாதுகாப்பு பிரிவுக்கு தெரிவித்திருக்கின்றோம். அவர்கள் குற்றச்செயல்களை அனுமதிப்பதில்லை. இதேபோன்று இந்த போராட்டத்தின் மூலம் மக்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படாமல் பாதுகாக்கவே அவசரகால சட்டம் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறில்லாமல் மக்களை அடக்குவதற்கு அவசரகால சட்டத்தை அமுல் படுத்தவில்லை - என்றும் சொன்னார். (ஐ)

## பாராளுமன்றம்...

அறிவித்தலின்படி,

புதிய பாராளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதன்படி, 9ஆவது பாராளுமன்றத்தின் 2 ஆவது கூட்டத்தொடர் நேற்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தது. புதிய கூட்டத்தொடர் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையுடன் ஆரம்பமாகும். (ஐ)

## இலங்கை...

படுத்தல் முகவர் அமைப்பு வலுவான பெரும்பான்மையுடன் கடினமான புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது.

புதிய ஜனாதிபதிக்கு பெரும்பான்மை உள்ளமை பாராளுமன்றத்தில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. அரசாங்கம் எதிர்கட்சி உறுப்பினர்கள் சிலரையும் உள்வாங்கியுள்ளது. இது பொருளாதார ஸ்திரதன்மை மற்றும் கடன் பேண்தகு தன்மை ஆகியவற்றை மீட்டெடுப்பதற்கான பேச்சுக்களை மேற்கொள்வதற்கும் கடினமான சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்குமான போதிய ஆதரவு அரசாங்கத்திற்கு காணப்படும் என்ற நம்பிக்கையை அளிக்கின்றது.

இவ்வாறான சீர்திருத்தங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஆதரவு கிடைக்கும் நிலையை ஏற்படுத்தலாம். இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கு இது அவசியமானது என நாங்கள் கருதுகின்றோம்.

ராஜபக்ஷ குடும்பத்தின் உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் அகற்றப்பட்டனர். ஆனால், ராஜபக்ஷக்களுடன் புதிய அரசாங்கத்துக்கு தொடர்பு உள்ளதால் இந்த நிர்வாகத்துக்கு மக்கள் ஆதரவு இல்லாத நிலை காணப்படுகின்றது. அரசாங்கத்துக்கு பாராளுமன்ற ஆதரவு வலுவானதாக காணப்படுகின்றது. ஆனால், மக்கள் ஆதரவு மிகவும் பலவீனமானதாக உள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களால் பதவியிலிருந்து அகற்றப்பட்ட முன்னாள் ஜனாதிபதியின் அரசாங்கத்தில் பிரதமராக பதவி வகித்தவர் தற்போதைய ஜனாதிபதி- பாரளுமன்றமும் அமைச்சரவையும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன அரசியல்வாதிகளின் ஆதிக்கத்தின் கீழ் காணப்படுகின்றன. இந்த கட்சி ராஜபக்ஷ குடும்பத்துடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டுள்ளது.

பொருளாதார நிலைமையில் முன்னேற்றம் ஏற்படாவிட்டால் அல்லது சீர்திருத்தங்களுக்கு பொதுமக்களின் எதிர்ப்பு உருவானால் ராஜபக்ஷ குடும்பத்துடனான அரசாங்கத்தின் தொடர்புகளால் நாட்டை ஸ்திரமிழக்கச்செய்யும் ஆர்ப்பாட்டங்கள் மூழக்கூடும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை இணக்கப்பாட்டுக்கு வரக்கூடிய சீர்திருத்தங்கள் உயர்வரிகள், செலவுகளை கட்டுப்படுத்துதல் நாணய மாற்று விகிதத்தில் நெகிழ்ச்சி தன்மைக்கான அர்ப்பணிப்பு போன்றவற்றை கொண்டிருக்கலாம். இதற்கு கடும் எதிர்ப்பு உருவாகலாம் இதனால் இவற்றை நடைமுறைப்படுத்துவது பாதிக்கப்படலாம் - என்றும் அந்த நிறுவனம் கூறியுள்ளது. (சி)

ஈழநாடு
Eelanadu

# டீசல் கடத்தமுயன்ற 7 பேர் மட்டக்களப்பில் சிக்கினர்!

மட்டக்களப்பு, ஜூலை 29

மட்டக்களப்பு எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து டீசல் கடத்த முற்பட்டவர்களை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மட்டு.வாழைச்சேனை மீன்பிடித்துறைமுக எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து சந்தேகநபர்கள் டீசலை சட்டவிரோதமாக கொள்கலன்களில் நிரப்பியுள்ளனர்.

கொள்கலன்கலில் நிரப்பிய டீசலை வாகனங்களில் ஏற்றி கடத்த முற்பட்டவேளையே குறித்த 7 சந்தேகநபர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று அதிகாலை குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வான் மற்றும் கூலர் ஆகிய இரு வாகனங்களையும் 1500 லீற்றர் டீசலையும் பொலிஸார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஒலுவில் துறைமுகத்திற்கு டீசலை எடுத்து செல்லும் போர்வையிலேயே இந்த கடத்தலை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், இவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# கடலில் நீராடுவதற்கு சென்ற மாணவன் சடலமாக மீட்பு!

அம்பாறை, ஜூலை 29

அம்பாறை மாவட்டம், பெரிய நீலாவணை பகுதியில் கடலலையில் சிக்கி இழுத்து செல்லபட்டு காணாமல் சென்ற பாடசாலை மாணவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்து.

பெரியதம்பிரான் ஆலய உற்சவ இறுதி நாளான்று, தீர்த்த உற்சவத்தில் நீராடச் சென்றபோது 3 மாணவர்கள் கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டனர்.

இரு மாணவர்கள் உயிர் தப்பி கரை சேர்ந்த நிலையில், மற்றுமொரு மாணவன் கடலுக்குள் இழுத்து செல்லப்பட்ட நிலையில் காணாமல்போயிருந்தார்.

இவ்வாறு காணாமல் சென்ற பெரிய நீலாவணை பகுதியைச் சேர்ந்த 16 வயது மதிக்கத்தக்க இராசநாயகம் சனுஜன் என்ற மாணவனின் சடலம் நேற்றுமுன்தினம் கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மரண விசாரணைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

சடலம் உடல்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளதுடன் சம்பவம் தொடர்பாக பெரிய நீலாவணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# அடுத்த தேர்தலிலும் மொட்டுக்கே வெற்றி

## அடித்து கூறுகிறார் கட்சி செயலர்



கொழும்பு, ஜூலை 29

அடுத்த பொதுத்தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியே வெற்றி பெறும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

“கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையர். அவர் நிச்சயம் நாடு திரும்புவார். சூழ்ச்சிமூலமே எமது தலைவர்கள் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர். இந்த உண்மையை மக்கள் புரிய ஆரம்பித்துள்ளனர் . எதிர்காலத்தில் ஆதாரங்களுடன் அவை நிரூபணமாகும்.

அடுத்த தேர்தலிலும் எமது கட்சிக்கே பெரும்பான்மை பலம் கிடைக்கும்.” - எனவும் செயலாளர் குறிப்பிட்டார். (அ)



# கீரிமலை கடலில் நேற்று பிதிர்க்கடன் செலுத்தினர் ஆயிரக்கணக்கானோர்!

யாழ்ப்பாணம், ஜூலை. 29

தந்தையை இழந்தவர்களுக்கு பிரதிர்க்கடன் செலுத்தும் விரதமான ஆடி அமாவாசை விரதத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணம் கீரிமலை கடற்கரையில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

தந்தையை இழந்தவர்கள் தமது பிதிர்க்கடன்களை செலுத்தி கடலில் நீராடினார்கள்.

அதேவேளை மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தீர்த்தோற்சவமும் நேற்றைய தினம் கீரிமலை கடற்கரையில் நடைபெற்றது.

அதன் போதும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு முருகப் பெருமானை வழிபட்டு தீர்த்தமாடினர்.

ஆடி அமாவாசை விரதமானது இந்து சமயத்தைச் சேர்ந்த அனைவராலும் பக்தியுடன் அனுஷ்டிக்கப்படும் விரதம். இந்நாளில் இந்துக்கள் சமுத்திரத்தில் அல்லது



புண்ணிய நதிகளில் தீர்த்தமாடி தம் மூதாதையர்களை முக்கியமாக பெற்ற தந்தையை நினைவு கூர்ந்து விரதமிருந்து பிதிர்க்கடன் செய்யும் நாள் ஆகும். (அ)

# ஜனாதிபதி மாளிகையிலிருந்து மீட்கப்பட்ட பணத்தை ஒப்படைக்குமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு பணிப்பு

கொழும்பு, ஜூலை 29

ஆர்ப்பாட்டக்காரர்களால் ஜனாதிபதி மாளிகையில் இருந்து மீட்கப்பட்டதாக கூறப்படும் பணத்தொகையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது ஜனாதிபதி மாளிகையில் இருந்து மீட்கப்பட்ட சுமார் ஒரு கோடியே 78 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தொகையை பொலிஸாரிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒப்படைத்திருந்தனர்.

இந்த சம்பவம் இடம்பெற்று 3 வாரங்கள் நிறைவடைந்துள்ளதுடன், குறித்த பணத்தொகை தொடர்பில் நீதிமன்றுக்கு எந்தவொரு அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டிய நீதிவான், உடனடியாக அது தொடர்பான ஆவணங்களை நீதிமன்றில் சமர்ப்பிக்கவேண்டும் என உத்தரவிட்டார்.

இதேவேளை, ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்தமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட 4 சந்தேக நபர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்ட போது, அவர்களை தலா 5 இலட்சம் ரூபா வீதம் சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ)

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மன்னாரில் நிவாரண பொதிகள்

மன்னார், ஜூலை 29

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் (மெசிடோ) மன்னார் மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட பின்தங்கிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 400 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு 2500 ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொதிகள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

நானாட்டான் மற்றும் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே நேற்று வியாழக்கிழமை மதியம் நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில், பணியாளர்கள் குறித்த கிராமங்களுக்குச் சென்று குறித்த கிராம பிரதிநிதிகளுடன் இணைந்து நிவாரண பொதிகளை வழங்கினர். (அ)

# சமூக செயற்பாட்டாளர் பதும் கேர்ணர் கைது!

கொழும்பு, ஜூலை. 29

சமூக செயற்பாட்டாளர் பதும் கேர்ணர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் பத்தரமுல்ல - பொல்துவ சந்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பான விசாரணைகளுக்காகக் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்கு வருகை தந்திருந்தபோதே அவர் கைதுசெய்யப்பட்டார்.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்குள் நுழைவதற்கு முன்னர் அவர் சமூக ஊடகங்களில் நேரலை காணொளி ஒன்றையும் வெளியிட்டிருந்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.00 அணி :இயற்கை வழி



07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.யாழ்பாவாணன்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மலையாள திரைப்படம்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்-நகைச்சுவை நிகழ்ச்சி



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -பாரம்பரியம்



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு